நல்வழி

விளக்கக் கதைகள்



கழக வெளியீடு

நல்வழி விளக்கக் கதைகள்

ஆசிரியர் :

திரு க இனியன்

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.
1976

கழுப்பக்கிளர் இனியன் (1907)

கிளைகள் :

திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
கும்பகோணம்-1 திருச்சிராப்பள்ளி-2

கழக வெளியீடு : ௮௬௯

முதற்பதிப்பு : நவம்பர் 1956

மறுபதிப்புகள் : நவம்பர் 1958; நவம்பர் 1960;
மே 1965; ஜூன் 1973; திசம்பர் 1976

NALVAZHI VILAKKAK KATHAIGAL

அப்பர் அச்சகம், சென்னை-600 001. (1/6)

பதிப்புரை

செந்தமிழ் மொழிக்கண் திருக்குறள் பொதுநூல். இது நம் நாட்டகத்தும், வீட்டகத்தும் களிநடம்புரிதல் வேண்டும். அன்றே நம் தமிழகம் நன்றே மிளிரும் நாளாகும்.

இதன் சாயல்களே பிற்காலத்துத் தோன்றிய அற நூல்கள். அவற்றுள் ஒன்றே நல்வழி என்னும் அறநூல். இஃது எளிய இனிய நன்னடையில் இயன்றது. ஔவைப் பிராட்டியாரால் இயற்றியருளிச் செய்யப் பெற்றது.

'இளமையிற் கல்வி சிலையி லெழுத்து' என்ப ஆகலான், நம் இளஞ்சிறார்க்கு, விளையாடும் பருவ முளைப் பருவத்தினர்க்கு, இவற்றைக் கதைகள் வாயிலாக விளக்குதல் சிறந்தது, நலந்தருவது எனக் கருதி ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, வெற்றிவேற்கை, நல்வழி, நன்னெறி போன்ற ஏனைய அறநூல்களுக்கும் திரு. க. இனியன் அவர்களைக்கொண்டு எழுதுவித்து நூலுருவாக்கி வெளியிட்டுள்ளோம்.

இஃது அவற்றுள் நல்வழி விளக்கக் கதைகளாகும். இதனையும் ஏனைய விளக்கக் கதைநூல்களையும் பந்தெறிந் தாடுஞ் சிறுர் கைகளில் முந்திருப்பச் செய்து கற்கச் செய்வது, நம் தமிழகப் பெருமக்கள் கடன். இதனை வாங்கிக் கற்குமாறு செய்து எம்மையும் ஊக்குவிப்பார் களென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

நல்வழி விளக்கக் கதைகள்

—:o:—

க. ஔவையார்

ஔவைப் பிராட்டியார் என்பவர் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை முதலிய அற நூல்களை இயற்றியருளிய தவமூதாட்டியாவர். இவற்றைத் தவிர வேறு பல பாக்களும் இவர் இயற்றியுள்ளார். இவர் ஆனைமுகக் கடவுளிடத்திலே மிகுந்த அன்புடையவர்.

இளமைதொட்டே விநாயகக் கடவுளைப் பூசனை புரிந்து வழிபட்டுக் கொண்டிருந்தார். பூசையின்போது பால் தேன் பாகு பருப்பு இவற்றை ஒன்றுபடுத்திச் செய்த ஒருவகைச் சிற்றுண்டியைத்தான் பெரும்பாலும் நைவேத்தியமாக வைப்பார். இதனையே இவர் பாடலிலும் அமைத்துப் பாடினார். ஔவையாரின் வேண்டுகோள் வீண் போகவில்லை. நாளடைவில் ஔவையாருக்குச் செந்தமிழறிவு மிகுதியாகப் பெருகி வந்தது. ஔவையாருடைய தமிழறிவு மற்றைப் புலவர்களின் அறிவுக்கும் மேலோங்கி நின்றது. ஆகவே, கடவுளை வழிபடுதல் எத்தகையோருக்கும் மிகுந்த நன்மையை உண்டாக்கும்.

"பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா."

(உரை.) கோலம் செய் - அழகினைச் செய்கின்ற, துங்கக் கரிமுகத்து தூமணியே - உயர்வாகிய யானை முகத்தையுடைய தூய்மை மிக்க மணியைப் போன்ற விநாயகக் கடவுளே!, பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் - பசும்பாலும் தெளிவுடைய தேனும் வெல்லப்பாகும் பருப்பும், இவை-ஆகிய இவை, நாலுங் கலந்து - நான்கையும் ஒன்றுபடுத்தி, நான் உனக்குத் தருவேன் - அடியேன் உனக்குக் கொடுப்பேன், நீ எனக்குச் சங்கத் தமிழ் மூன்றும் தா - தேவரீர் அடியேனுக்குத் தமிழ்ச் சங்கத்தில் வளர்க்கப்பட்ட முத்தமிழ் அறிவையும் நன்கு கொடுத்தருள்வீராக.

(கருத்து.) விநாயகக் கடவுளே! நான் உனக்குப் பால் முதலியவற்றைத் தருவேன்; தேவரீர் எனக்கு முத்தமிழ் அறிவையுந் தந்தருள்வீராக.

———

உ. வாணிகஞ் செய்த வல்லாளன்

பூண்டி என்னும் ஓர் ஊரிலே வல்லாளன் என்னும் பெயருடையவன் ஒருவன் இருந்தான். அவன் பொருளை மிகுதியாகத் தேடவேண்டும், அதற்கு வழி யாது என்று எண்ணமிட்டான். வாணிகஞ் செய்வதுதான் பொருள் தேடுவதற்கு வழி என்று முடிவு செய்தான். தன்னுடைய நிலங்கள் சிலவற்றை விற்று ஆயிரம் ரூபா பணத்தைத் தேடினான். அப் பணத்தை முதற் பொருளாக வைத்துக்கொண்டு வாணிகஞ் செய்யத் தொடங்கினான். அவன் கடைக்குப் பக்கத்துக் கடைக் காரர்களுக்கெல்லாம் நல்ல ஊதியங் கிடைத்துப் பெரும் பணக்காரர்களாகிக் கொண்டிருந்தார்கள். ஆனால், வல்லாளனுக்கு ஊதியஞ் சிறிதுங் கிடைக்கவில்லை. அடிக்கடி மிகுந்த பொருளிழப்பு ஏற்பட்டது. நாளடைவில் முதற்பொருளை தேறாமல் ஆயிர ரூபாயும் அழிந்து போய்விட்டது.

வல்லாளனுக்கு மிகுந்த மன வருத்தம் உண்டாயிற்று. "அந்தோ நாம் நமக்கு இருந்த நிலத்தைக்கூட விற்றுவிட்டோமே. நாம் மற்றவர்களைவிட அறிவிலோ ஆற்றலிலோ குறைந்திருக்கவில்லையே. அவ்வாறாகப் பொருள் தேடி ஏன் முன்னுக்கு வர முடியவில்லை? இதற்குக் காரணம் யாது?" என்று எண்ணமிட்டான். அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஊரில் இருந்த ஒரு பெரியவரிடம் தனது கருத்தைக் கூறினான். அவர் நல்ல அறிவாளி. அவர் வல்லாளனைப் பார்த்து, "அன்பனே! அறிவும் ஆற்றலும் இருந்தால் போதாது,

முன்பிறப்பில் நல்வினை செய்திருக்க வேண்டும். அவ்வாறு நல்வினை செய்யாமல் தீவினை செய்திருந்தால் இப் பிறப்பில் முன்னுக்கு வர முடியாது. அழிவுதான் நேரிடும். இதற்குச் சிறிதும் ஐயமே இல்லை. நீ முன் பிறப்பில் நல்வினை செய்யாமல் தீவினை செய்திருக்கிறாய் போலும்," என்று கூறி மேலுஞ் சில அறிவுரைகளைக் கூறியனுப்பினார்.

"புண்ணியம்ஆம் பாவம்போம் போனநாள் செய்தஅவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள் —எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத் தோர்சொல்லும்
தீதொழிய நன்மை செயல்.''

(உரை.) புண்ணியம் ஆம் - நல்வினையானது வளர்ச்சியைச் செய்யும், பாவம்போம் - தீவினையானது அழிவினைச் செய்யும், போனநாள் செய்த அவை - முற்பிறப்பில் செய்த அந்த நல்வினை தீவினைகளே, மண்ணில் பிறந்தார்க்கு - உலகத்தில் பிறந்தவர்கட்கு, வைத்த பொருள் - தேடிவைத்த பொருளாகும், எண்ணுங்கால் - எண்ணிப் பார்க்கும்போது, எச் சமயத்தோர் சொல்லும் - எந்த மதத்தினர் கூறுவதும், ஈது ஒழிய வேறு இல்லை - இதைத்தவிர வேறொன்றும் இல்லை, (ஆகையால்) தீது ஒழிய நன்மை செயல் - தீமைகளைச் செய்யாமல் நன்மைகளைச் செய்தல் வேண்டும்.

(கருத்து.) தீமைகளை அகற்றி நன்மைகளையே நாம் செய்தல் வேண்டும். (க)

———

௪. ஔவையாரும் ஆராய்ச்சியாளர்களும்

ஒருநாள் ஔவையார் ஓர் ஊர் வழியே சென்று கொண்டிருந்தார். ஓரிடத்தில் பலபேர் உரையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பேசிக்கொள்வது எதைக் குறித்து என்று ஔவையார் சற்று நின்று உற்றுக்கேட்டார். அவர்கள் பேசிக்கொண்ட செய்தி சாதியைப் பற்றியது என்று தெரிந்தது. ஒருவர், "இவ்வுலகத்தில் நூற்றுக்கணக்கான சாதிகள் இருக்கின்றன," என்றார். வேறொருவர், "ஆயிரக்கணக்கில் இருக்கின்றன," என்றார். வேறொருவர், "தாழ்ந்த சாதியில் நூற்றைம்பதும் உயர்ந்த சாதியில் நூற்றைம்பதுமாக எல்லாச் சாதிகளையும் முந்நூறில் அடக்கி விடலாம்," என்றார்.

ஔவையாருக்கு இதற்குமேல் பொறுக்க முடியவில்லை. அவர் அவர்களை நெருங்கி, "ஓ அன்பர்களே! நீங்கள் பேசிக்கொள்வது முழுத் தவறு. இவ்வுலகத்தில் இரண்டே இரண்டு சாதிகள்தாம் இருக்கின்றன. ஏற்போர்க்கு அறஞ் செய்பவர்கள் உயர்ந்த சாதி, செய்யாதவர்கள் தாழ்ந்த சாதி. இந்த இரண்டு சாதிகளைத் தவிர மற்றைச் சாதிகளெல்லாம் பொய்யானவை. அறநூல்களும் இவ்வாறுதான் உரைக்கின்றன. இதனை நீங்கள் இனிமேலாயினும் உணர்ந்து கொள்ளுங்கள்," என்று கூறிச் சாதியிரண்டொழிய என்னும் இப்பாட்டையும் பாடிவிட்டுச் சென்றார்.

இதனைக் கேட்டவர்கள் யாதும் மறுமொழி கூற முடியாமல் பேசாதிருந்தனர். அவர்கட்கு அவர்களுடைய

சொற்போர் மிகுந்த நாணத்தைக் கொடுத்தது. அது முதல் அவர்கள் தங்களுடைய மனப்போக்கை மாற்றிக் கொண்டனர்.

"சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி.''

(உரை.) சாற்றுங்கால்-சொல்லுமிடத்தில், மேதினியில் - இந்த உலகத்தில், சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை-இரண்டு சாதிகளைத் தவிர வேறு சாதிகள் இல்லை. (அந்த இரண்டு சாதிகள் எவை யென்றால்) நீதி வழுவா நெறிமுறையில்-நீதி தவறாத நல்ல வழியிலே முறைமையோடு, இட்டார் பெரியோர் - இரவலர்க்குப் பொருள் முதலியவற்றைக் கொடுப்பவர்கள் உயர்ந்தவர்கள், இடாதார் இழி குலத்தோர்—இரந்தவர் கட்கு யாதுங் கொடாதவர்கள் தாழ்ந்த குலத்தினர், பட்டாங்கில் உள்ளபடி-அறநூலின் முடிபு இதுவேயாம்.

(கருத்து.) இரந்தவர்களுக்குப் பொருள் முதலியன கொடுப்பவர் உயர்ந்தவர்கள்; கொடாதவர்கள் தாழ்ந்தவர்கள். ஆக உலகில் இவ் இரு சாதிகளைத் தவிர வேறு இல்லை. (உ)

———

௪. துரையப்பனும் துறவியும்

ஓர் ஊரிலே துரையப்பன் என்னும் பெயருடைய செல்வன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் பொருள் மிகுதியாக இருந்தது. அவன் தன்னைப் பொறுத்தவரையில் நன்றாக உண்டு உடுத்துக் களித்துச் செருக்கித் திரிந்தானேயன்றித் தருமஞ் செய்வதில் சிறிதுங் கருத்துச் செலுத்தவே இல்லை. இந்தச் செல்வன் மேலும் மேலும் பொருளைப் பல வழிகளிலும் தேடிக்கொண்டேயிருந்தான். ஒருநாள் துறவியொருவர் துரையப்பனுடைய ஊருக்கு வந்தார். துரையப்பனுடைய செல்வப் பெருக்கையும் அவன் பிறருக்குச் சிறிதும் பயன்படாமல் வாழ்தலையும் உணர்ந்தார். அவனுக்கு அறிவுரை கூறி நல்வழிப்படுத்த வேண்டும் என்று எண்ணினார். உடனே துரையப்பன் வீட்டிற்குச் சென்றார்.

துரையப்பன் துறவியை வரவேற்றுப் போற்றினான். துறவியார் துரையப்பனைப் பார்த்து, "அப்பனே! நம்முடைய இந்த உடம்பு ஒரு துன்பப் பையாகும். எல்லாவகையான துன்பங்களும் இந்த உடலுக்குள் அடைத்துவைக்கப்பட்டுள்ளன. நீ பெரும்பொருள் படைத்தவனாக இருந்திருக்கிறாயே; என்றைக்காவது மகிழ்ச்சியுடன் இருக்கிறாயா? உண்பதையும் உடுப்பதையும் உண்மையாக நினையாதே. நல்ல அறங்களை மிகுதியாகச் செய். அதுதான் உனக்கு நற்பயனை அளிக்கும். அறப்பயனைத் தேடாமற் காலங்கழிப்பாயானால், உன்னை எமதூதர்கள்

பிடித்துக்கொண்டுபோய்க் கொடுமையாகத் துன் புறுத்துவர்," என்று அறிவுரை கூறி அச்சுறுத்தினர். துறவியாரிடம் வியக்கத்தக்க ஆற்றல் அமைந்திருந்த படியால் துரையப்பன் அன்று முதல் திருந்தி அறஞ் செய்யத் தொடங்கினன்.

"இடும்பைக்கு இடும்பை இயலுடம்பி தன்றே
இடும்பொய்யை மெய்யென் றிராதே—இடுங்கடுக
உண்டாயி னுண்டாகும் ஊழிற் பெருவலிநோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு."

(உரை.) இயல் உடம்புஇது-பொருந்திய இவ் வுடம் பானது, இடும்பைக்கு-துன்பமாகிய சரக்குகட்கு, இடும்பை அன்றே-இட்டுவைக்கும் பையல்லவா?, இடும் பொய்யை - உணவினையிடுகின்ற நிலையில்லாத இவ் வுடம்பை, மெய் என்று இராது-நிலையுடையது என்று எண்ணியிராமல், கடுக - விரை வாக, இடும்-வறியார்க்கு அறஞ் செய்யுங்கள், உண்டாயின் - அறம் உங்களிடத்தில் உண்டாகுமானல், பெரு வலிநோய் - மிக்க வலிமையுடைய பாசமாகிய பிணியினின்றும், விண்டாரை- நீங்கியவரை, கொண்டாடும் வீடு-அறிஞர்களால் போற்றப் படுகிற வீடுபேருனது, ஊழின் உண்டாகும் - முறைமையாக உங்கட்குக் கிடைக்கும்.

(கருத்து.) நீங்கள் அறஞ் செய்வீர்களானல், உங்கட்கு வீடுபேறு எளிதில் உண்டாகும். (௩)

———

௫. கேணிவெட்டிய தோணியப்பன்

சங்கபுரம் என்னும் ஊரிலே **தோணியப்பன்** என்னும் பெயருடையவன் ஒருவன் இருந்தான். அவனுடைய வீட்டிற்குப் பின்புறமாகத் தோட்டம் ஒன்று இருந்தது. தோணியப்பன் தன்னுடைய தோட்டத்திலே கேணி ஒன்று வெட்ட விரும்பினான். கல் முதலானவற்றைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டு நிலத்தில் இருபதடி ஆழம் வரையில் வெட்டி மண்ணை வெளிப்படுத்தி விட்டுக் கிணற்று வேலையைச் செய்யத் தொடங்கினான். ஒருநாள் இரவில் அந்தப் பள்ளம் இடிந்து விழுந்து மூடிப்போய்விட்டது. தோணியப்பன் மீண்டும் மண்ணை வெட்டி அப்புறப்படுத்த மறுமுறையும் இடிந்துவிட்டது. இவ்வாறு பல தடவை வெட்டியும் இடிந்துகொண்டே வந்தது.

தோணியப்பன் அவ்வாறு கிணறு இடிவதற்குக் காரணம் என்ன என்று நண்பர்களைக் கலந்து ஆராய்ந்தான். சிலர், “காலம் வந்தால் எல்லாம் தானாகவே நடக்கும்,” என்றனர். சிலர், “கிணறு வெட்டுமிடத்தில் பூதம் ஒன்று இருக்கிறது. அதற்குப் பலி கொடுத்தால் கேணிப்பள்ளம் இடிந்து விழாமல் இருக்கும்” என்றார்கள். தோணியப்பன் பூசை முதலியவற்றை நடத்திப் பலி கொடுத்து மேலும் கேணி வேலையைத் தொடங்கினான். அப்பொழுதும் இடிந்து விழுந்தது. சிலர், “எல்லாவற்றிற்கும் காலம் வரவேண்டும்; சிறிது

நாளைக்குப் பொறுத்திரு,'' என்றனர். தோணியப்பன் அவ்வாறே சிலகாலம் பொறுத்திருந்தான். பிறகு சில நல்ல குறிகளைப் பார்த்து மீண்டும் வேலையைத் தொடங்கினன். இப்பொழுது தோணியப்பனுக்கு நல்ல காலம் வந்துவிட்டபடியால், கேணி இடிந்து விழவில்லை. மிகுவிரைவாகக் கேணியைக் கட்டி முடித்தான்.

“எண்ணி ஒருகருமம் யார்க்குஞ்செய் யொண்ணுது
புண்ணியம் வந்தெய்து போதல்லால்—கண்ணில்லான்
மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோல் ஒக்குமே
ஆங்காலம் ஆகும் அவர்க்கு.''

(உரை.) யார்க்கும் - எத்தன்மையோர்க்கும், புண்ணியம் வந்து எய்து போது அல்லால்-முன்செய்த நல்வினை வந்து கூடும் பொழுதல்லாமல், ஒரு கருமம்-ஒரு காரியத்தை, எண்ணி-ஆராய்ந்து, செய்யொண்ணுது - செய்து முடிக்க முடியாது, (செய்து முடிக்கத் தொடங்கினுல்) கண் இல்லான் - குருடன், மாங்காய் விழ - மாங்காயை அடித்து வீழ்த்துதற்கு, எறிந்த மாத்திரைக்கோல் ஒக்கும் - எறிந்த மாத்திரைக்கோலைப் போலும், ஆம் காலம்-நல்வினை வந்து சேரும்பொழுது, அவர்க்கு ஆகும் - அவர்க்கு அக் காரியம் எளிதாக முடிவு பெறும்.

(கருத்து.) எடுத்துக்கொண்ட காரியங்கள் இனிது முடிவதற்கு நல்லகாலம் வருதல் வேண்டும்; இன்றேல் கைப்பொருளையும் இழந்து துன்புற நேரிடும். (௪)

———

சு. கவலையால் மாண்ட காராளன்

பூதூர் என்னும் மூதூர் ஒன்றிலே ஏறக்குறைய நாற்பத்தெட்டு யாண்டுகளுக்கு முன் காராளன் என்னும் பேராளன் ஒருவன் இருந்தான். இவன் முன் பிறப்பில் செய்த வினைப்பயனால் வறிய குடும்பத்தில் தோன்றினான். அன்றாடம் உழைத்துத்தான் அவன் வாழ்க்கையை நடத்தவேண்டும். செல்வத்தைக் காராளனுக்கு மிகுதியாகக் கொடுக்காத கடவுள், மக்கட்பேற்றை விரிந்த மனப்பான்மையோடு நன்றாக வழங்கினார். ஆணும் பெண்ணுமாகப் பன்னிரண்டு பிள்ளைகள் தோன்றினர்.

பெருங் குடும்பியாகப்போன காராளன் பெருஞ் செல்வனாக வேண்டும் என்று பெரிதும் முயன்றான். பொருள் தேடுவதற்காகப் பலவகைத் தொழில்களில் ஈடுபட்டான். பொருள் இவனிடம் குவியவில்லை. செல்வஞ் செல்வத்தோடு சேரும் என்பதற்கேற்ப அது செல்வர்களிடமே செருகிக் கொண்டிருந்தது. காராளன் குடும்பத்தைப் பாதுகாக்க மிகுந்த தொல்லைப் பட்டான்.

குடும்பச் சுமையைக் குறைத்துக்கொண்டால் பாதுகாப்பது எளிதாக இருக்கும் என்று எண்ணினான். மக்களிற் சிலரை உறவினர்கட்கு வளர்ப்பாகக் கொடுத்தான். ஆனால், வளர்ப்பாகச் சென்ற மக்கள் வளர்ப்புத் தாய்தந்தையர்களைத் தங்களுக்குப் பிடிக்கவில்லை யென்று கூறி ஈன்ற தாய் தந்தையர்களிடமே வந்து விட்டனர். இதனால் காராளனுக்கு நாளுங் கவலை

மிகுதிப்பட்டுக் கொண்டே யிருந்தது. காராளன் கவலையால் நாள்தோறும் இளைத்துக் கொண்டே இருந்தான். எல்லாம் வினைப்பயன் என்று அவன் சிறிதும் உணர்ந்துகொள்ளவில்லை. இறுதியில் மாண்டுபோனான். காராளனுடைய இரங்கத்தக்க நிலையைக் கண்ட பலரும் வருந்தினர்.

‘‘வருந்தி அழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றால் போகா—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம்நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.’’

(உரை.) வாராத - வரக்கூடாதவை, வருந்தி அழைத்தாலும்—பரிந்து அழைப்பினும், வாரா - வாராவாம், பொருந்துவன - வருபவற்றை, போமின் என்றால் - என்னைவிட்டுப் போங்கள் என்று கூறினால், போகா - போகமாட்டாவாம், இருந்து ஏங்கி - இருந்து ஏக்கமுற்று, நெஞ்சம் புண் ஆக - மனம் புண்ணாகுமாறு, நெடுந்தூரம் தாம் நினைந்து - அவற்றைக் குறித்துத் தாம் மிகுதியாக எண்ணி, துஞ்சுவதே - இறந்து போவதே, மாந்தர் தொழில் - மனிதர்களுடைய வேலையாக இருக்கிறது.

(கருத்து.) எல்லாம் ஊழ்வினைப்படியே நடைபெறுமே யன்றி மனிதர்களுடைய முயற்சியினால் எச்செயலும் நிறைவேறமாட்டா. (௪)

———

எ. இன்பந் தேடிய இளங்கீரன்

அளகை என்னும் பெயருடைய ஊரிலே இளங்கீரன் என்னும் பெயருடைய மனிதன் ஒருவன் இருந்தான். அந்த அளகையிலே இருந்தவர்கள் ஊர்ப் பெயருக்கு ஏற்ப நல்ல செல்வச் சிறப்புடன் வாழ்ந்திருந்தார்கள். அளகாபுரியிலும் பிச்சைக்காரர்கள் உண்டு என்பதற்கேற்ப இளங்கீரன் மட்டும் மிகுந்த வறுமையால் வருந்திக் கொண்டிருந்தான். பொருள் தேடி மற்றவர்களைப்போல் இன்ப நலங்களை இனிதடைந்து வாழவேண்டுமென்பது அவனுடைய பேரவா. ஆனால், அதற்கேற்ப நல்வினை இல்லையே! என்ன செய்வது? எல்லாவற்றிற்கும் நல்வினையன்றோ மூல காரணம்? "ஆசை இருக்கிறது தாசில் பண்ண; அதிருட்டம் இருக்கிறது கழுதை மேய்க்க," என்பர் பெரியோர்.

இளங்கீரன் பொருள்தேடிக் குவிப்பதற்காக எத்தனையோ துறைகளில் முயற்சி செய்தான். வாணிகஞ் செய்தான். மரக்கலமேறி வெளிநாடுகட்குச் சென்று அவ்விடங்களினும் மிக முயன்று பொருள் தேடினான். பொருள் குவிந்தபின் ஊரையடைந்தான். நல்ல பெரிய மாளிகை ஒன்று கட்டிக்கொண்டு இன்ப நலங்களை யெல்லாம் இனிது துய்க்கவேண்டுமென்று எண்ணினான். நோய்கள் பல இளங்கீரனைப் பற்றிக் கொண்டன. கஞ்சியைத் தவிர வேறு எதனையுஞ் சாப்பிடமுடியவில்லை. வெகுநாள் நோயால் வருந்தி இறுதியில் மாண்டுபோனான்.

இளங்கீரன் வருந்திப் பொருள் தேடியும நுகர முடியாமல் மாண்டானே என்று பலரும் இரங்கினர். இளங்கீரனுக்குத் திருமணங்கூட நடவாமல் இருந்த படியால், அவன் தேடிய பெரும்பொருளை அவனு டைய உறவினர் பங்கிட்டுக் கொண்டு நுகரலாயினர்.

"உள்ள தொழிய ஒருவர்க் கொருவர்சுகம்
கொள்ளக் கிடையா குவலயத்தில்—வெள்ளக்
கடலோடி மீண்டும் கரையேறி னாலென்
உடலோடு வாழும் உயிர்க்கு."

(உரை.) ஒருவருக்கு - ஒருவர்க்கு, உள்ளது ஒழிய - ஊழ் வினையினால் உள்ள அளவேயில்லாமல், ஒருவர் சுகம்-மற்றொரு வருடைய இன்பங்களை, கொள்ள-நுகர விரும்பினால், கிடையா-முடியாது; ஆகையால், குவலயத்தில் - பூமியில், உடலோடு வாழும் உயிர்க்கு - மக்களுடலோடு கூடி வாழும் உயிர்களுக்கு, வெள்ளக்கடல் ஓடி மிகுந்த நீரையுடைய கடல் கடந்து சென்று (பொருள் தேடிக்கொண்டு), மீண்டு கரையேறினால் - திரும்பி வந்து கரையேறினாலும், என்-அதனாற் பயன் என்ன?

(கருத்து.) நல்வினைக்குத் தகுந்த அளவுதான் இன்பம் உண்டாகுமே தவிர அதற்குமேல் சிறிதும் உண்டாக மாட்டாது. (௬)

௮. மெய்யறிவு பெற்ற சித்தர்

வெகுகாலத்திற்கு முன்பே மாயூரத்தில் சித்தர் ஒருவர் இருந்தார். அவருடைய பெயர் சிற்றம்பல நாடிகள். அவர் மெய்யறிவு கைவரப்பெற்றவர். நன்மை தீமை, இன்ப துன்பம், இகழ்ச்சி புகழ்ச்சி முதலிய எல்லாவற்றையும் ஒரே தன்மையாகப் பார்க்கக் கூடிய பண்பு அவரிடம் நன்ருக அமைந்திருந்தது. இவருக்கு மாணவர்கள் பலர் இருந்தனர். மாணவர் களிலும் மெய்யறிவு அமையப் பெற்றவர்கள் சிலர் இருந்தனர். இவ் வுடலின் நிலையாமையையும் பொய்த் தன்மையையும் நன்குணர்ந்த சித்தர் தமது உடலுக்கு ஏற்படும் எத்தகைய இன்ப துன்பங்களையும் ஒரு பொருட்படுத்தவே மாட்டார்.

ஒரு நாள் ஓர் அன்பர், சித்தரையும் அவருடைய மாணவர்களையும் தமது இல்லத்திற்கு அழைத்துக் கொண்டுபோய் உணவளித்தார். இலையில் உணவைப் படைத்த பிறகு நெய்வார்த்தற் பொருட்டு நெய் வைக்கப் பெற்றிருந்த கலயத்தை எடுக்கச் சென்றவர் நெய்க் கலயத்திற்குப் பதிலாக வேப்பெண்ணெய் இருந்த கலயத்தைத் தவறுதலாக எடுத்துக்கொண்டு வந்து எல்லோருடைய இலையிலும் வேப்பெண் ணெயை ஊற்றி விட்டார். சித்தரும் அவருடைய மாணவர்களும் உண்ணத் தொடங்கினர்.

அனைவரும் யாதுஞ் சொல்லாமல், "உடல் அழியக் கூடியதுதானே! எதனையுண்டால் என்ன? எவ்வாறு போனால் என்ன?" என்று பேசாது

உண்டனர். அக் கூட்டத்தில் இருந்தவர் ஒக்காள மிட்டு வாந்தி பண்ணத் தொடங்கினர். அவ்வளவில் சிற்றம்பல நாடிகள், “நாக்கு ருசிகொள்ள உண்ண விரும்புகிற அஞ்ஞானிகட்கும் நம் திருக்கூட்டத்திற்கும் ஒத்துக்கொள்ளாது,” என்று உரைத்தனர். வாந்தி யெடுக்கத் தொடங்கியவர் அவர்களைவிட்டு நீங்கிப்போய் விட்டார். மெய்யறிவு கைவரப் பெற்றவர்கள் எதிலும் பற்றற்றிருப்பார்கள் என்பது இவரிடத்தில் நன்கு விளங்கியது.

“எல்லாப் படியாலும் எண்ணினல் இவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை—நல்லார்
அறிந்திருப்பார் ஆதலினல் ஆங்கமல நீர்போல்
பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு.”

(உரை.) எல்லாப் படியாலும் - எல்லாவகையாலும், எண்ணினல் - ஆராய்ந்தால், இவ் வுடம்பு - இந்த உடம்பானது, பொல்லாப்புழு-பொல்லாத புழுக்களுக்கும், மலிநோய்-நிறைந்த பிணிகட்கும், புல்குரம்பை - புல்லிய குடிசையாக இருக்கின்றது, நல்லார் - நல்லறிவுடையோர், அறிந்திருப்பார் - இவ் வுடம் பினிழிவை அறிந்திருப்பார்கள்; ஆதலினல் - ஆகையால், அவர்கள், கமலநீர்போல் - தாமரையிலைத் தண்ணீரைப்போல, பிறிந்து இருப்பார் - (உடம்போடு கூடியிருந்தும்) கூடாதவர் களாகவே யிருபபார்கள்; பிறர்க்குப் பேசார்-அதைக் குறித்துப் பிறரிடத்தில் பேசமாட்டார்கள்.

(கருத்து.) மெய்யறிவாளர்கள் இவ்வுடலுக்கு ஏற்படும் இன்பதுன்பங்களை ஒரு பொருட்படுத்த மாட்டார்கள். (எ)

கூ. சீத்தலைச் சாத்தனார்

முன்னாளில் மதுரைமா நகரில் சீத்தலைச் சாத்தனார் என்னும் பெயருடையவர் ஒருவர் இருந்தார். அவர் நெல், பயறு, உளுந்து, துவரை முதலிய கூலங்களை வாங்கி விற்று வாணிகஞ் செய்துகொண்டிருந்தார். அதனால் அவர் பெயர் "கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்" என்று நீண்டு வழங்கியது. கூலவாணிகத்தினால் அவருக்குப் பெரும் பொருள் குவியவில்லை. வாழ்க்கைக்குப் போதிய அளவுக்கே வருவாய் வந்து கொண்டிருந்தது.

சாத்தனார் 'நாம் செல்வத்தால் பெரும்புகழ் பெற்று விளங்குவது அருமை, கல்வியையாயினும் நன்கு கற்றுச் சிறப்படைவோம்' என்று எண்ணினார். நாளும் நூல்கள் பலவற்றைக் கற்று ஆராய்ச்சி செய்தார். பிறகு மணிமேகலை என்னும் நூலைத் தாமே இயற்றினார். அந்நூல் மிகச் சிறந்ததாக விளங்குகிறது. அதனால் அவருடைய சிறப்பு என்றும் நின்று விளங்குவதாயிற்று. ஒருவர் தேடத்தக்கது புகழே என்பதை உலகம் இவர்பால் அறிந்துணர்ந்தது.

"ஈட்டும் பொருள்முயற்சி எண்ணிறந்த ஆயினும்ஊழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம்—தேட்டம்
மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணுந் தனம்."

(உரை.) மகிதலத்தீர் - நிலவுலகில் உள்ள மனிதர்களே!, கேண்மின் - கேளுங்கள், ஈட்டும் - தேடுதற்குரிய, பொருள் -

பொருளைப்பற்றிய, முயற்சி - முயற்சிகளானவை, எண் இறந்த ஆயினும்-அளவில்லாதனவானாலும், ஊழ் கூட்டும்படி அன்றிக் கூடாவாம்-ஊழ்வினை கூட்டுமளவுக்கேயல்லாமல் அதற்குமேல் சேராவாம், தனம் தரியாது-ஊழால் வந்து சேருகின்ற பொருள் நிலைத்திருக்க மாட்டாது, தேட்டம் மரியாதை - ஆகவே நீங்கள் தேடத்தக்கது சிறப்புத் தங்கிய புகழேயாம்.

(கருத்து.) மிகுந்த முயற்சியினால் அடையக்கூடிய பொருள் ஊழ்வினை உள்ள அளவுக்குத்தான் உண்டாகும்; ஒருவர் முயற்சி செய்து தேடக்கூடியது புகழ்தான். (அ)

௰. காளத்தி முதலியார்

பல ஆண்டுகட்குமுன்பு தொண்டைமண்டலத்திலே **காளத்தி முதலியார்** என்னும் பெயருடைய வள்ளல் ஒருவர் இருந்தார். அவர் மிகுந்த அருள் உடையவர். புலவர்கள் தம்மீது செய்யுள் பாடிக்கொண்டோ அல்லது வீணுகவோ பொருளுதவியை நாடி வந்தால் தகுந்தவாறு பொருள் கொடுத்து உதவி செய்வார். தம்மிடம் ஏற்று வந்தவர்களுக்கு இல்லையென்று இயம்பமாட்டார். இதனுல் இவருடைய பெருமை நாடெங்கும் சிறந்தோங்கியது. இவருடைய புகழைக் கண்டு பொருமைகொண்ட அரசன் இவரால் தன்னுடைய புகழ் மங்கிப்போகிறது என்று எண்ணினுன். இவருடைய பொருள் முழுவதையும் பறிமுதல் செய்துவிட்டான். அதனுல் இவர் மிகுந்த துன்பப்பட்டார்.

அந் நாளில் **மதுரகவிராயர்** என்னும் பெயருடைய புலவர் ஒருவர் இருந்தார். அவர் மிகுந்த வறுமையால் பெருந் தொல்லைப்பட்டார். காளத்தி முதலியாரிடம் நல்ல உதவி பெறலாம் என்று எண்ணினுர். புறப்பட்டு வந்து காளத்தி முதலியாரைக் கண்டார். தமது வறுமைத் துன்பத்தைக் கூறினுர். புலவருக்குக் கொடுப்பதற்குக் காளத்தி முதலியாரிடம் பொருள் யாதும் இல்லை, "என்னிடம் பொருள் யாதும் இல்லை," என்று சொல்வதற்கு நாணினுர். இல்லை என்பதை விட இறந்து போகலாம் என்று எண்ணினுர். முதலியாருடை வீட்டிற்குப் பின்புறத்திலே பாம்புப் புற்று ஒன்று இருந்தது. முதலியார் அந்தப் புற்றிடத்திற்குச்

சென்றூர். தம்மைப் பாம்பு கடித்துக் கொல்ல வேண்டும் என்று எண்ணியவராய்ப் புற்றுக்குள் கையை விட்டார். பாம்பு அந்த வள்ளலைக் கடிக்க வில்லை. தன் முடிமணியை அவர் கையில் கக்கியது. முதலியார் அதனைப் புலவருக்குக் கொடுத்து அனுப்பினூர்.

'ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனுலும்
இல்லையென மாட்டார் இசைந்து.''

(உரை.) ஆற்றுப்பெருக்கு அற்று - ஆற்றிலே தண்ணீர் வற்றிப்போய், அடிசுடும் அந்நாளும்-மணலானது வெயிலினூலே காய்ந்து நடப்பவருடைய அடியைச் சுடுகிற அக்காலத்திலும், அவ்ஆறு - அந்த ஆருனது, ஊற்றுப்பெருக்கால் - ஊற்றுநீர்ப் பெருக்கினுலே, உலகு ஊட்டும்-உலகத்தார்க்கு நீரைக்கொடுக் கும், (அதைப்போல்) நல்ல குடிப்பிறந்தார்-நல்ல குடியிற் பிறந்தவர்கள், நல்கூர்ந்தார் ஆனுலும்-வறுமையை அடைந்தார் களாயினும், ஏற்றவர்க்கு-இரந்தவர்களுக்கு, இசைந்து-மனம் பொருந்தி, இல்லையென மாட்டார் - எம்மிடத்திலே யாதும் பொருளில்லையென்று சொல்லமாட்டார்கள்.

(கருத்து.) நற்குடியிற் பிறந்தவர்கள் தாங்கள் வறுமையை அடைந்தாலும் இரப்பவர்கட்குத் தம்மிடம் ஒன்றும் இல்லை யென்று சொல்லமாட்டார்கள். (கூ)

———

௧௧. ஔவையார் ஆறுதல் உரை

ஔவையார் ஒருநாள் ஓர் ஊர் வழியே மற்றோர் ஊருக்குச் சென்றுகொண்டிருந்தார். ஒரு வீட்டிலே பல பெண்கள் கூடிப் பேரொலி செய்து அழுது புலம்பிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அழுதுகொண் டிருப்பதற்குக் காரணத்தை உணராத ஔவையார் அவ் வீட்டிற்குச் சென்றார். அங்கு வெளியிலே சில பேர் உட்கார்ந்து உரையாடிக்கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்துப், "பெண் மக்கள் ஏன் அழுது கொண்டிருக்கின்றனர். காரணம் என்ன?" என்று உசாவினார். இருந்தவர்களில் ஒருவர் ஔவையாரைப் பார்த்து, "இவ் வீட்டிலே ஓர் ஆண் குழந்தை நான்கு ஆண்டு நிரம்பியதாக இருந்தது. அது சென்ற ஆண்டிலே மாண்டுபோய்விட்டது. அஃது இறந்து ஓராண்டு நிறைவாகிறது. முதலாவதாண்டுத் துக்கங் கொண்டாடுகிறோம்," என்று மறுமொழி கூறினார்.

அதனைக் கேட்டபொழுது ஔவையாருக்கு மிகு நகைப்புண்டாயிற்று. ஆயினும், அவர் நகைக்காமல் அந்த மனிதர்களைப் பார்த்து, "அன்பர்களே! உல கத்தில் பிறக்கின்ற உயிர்களெல்லாம் வினைப்பயனை நுகர்ந்து இறந்துபோகின்றன. ஒருவர் இறப்பதைக் குறித்து நாம் வருத்த வேண்டியதே இல்லை. ஆனால், நீங்கள் மறு ஆண்டில்கூட அழுவது என்ன மடமை? நீங்கள் இந்த ஆண்டில் மட்டுமன்றி இனிமேல் வரும் ஒவ்வோராண்டிலும் இவ்வாறே அழுதுகொண்டிருந் தாலும் ஏற்படப் போகிற பயன் யாதும் இல்லை.

ஆகவே, நீங்கள் நாமும் மாளப்போகிறவர்கள்தாம், அழுவதால் யாதும் பயனில்லை என்பதைத் தெளிவாக உணர்ந்து, அறஞ்செய்து நன்றாக வாழ்ந்திருப்பீர்களாக!'' என்று அறிவுரை கூறிவிட்டுச் சென்றார்.

''ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—வேண்டாம்
நமக்கும் அதுவழியே நாம்போம் அளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும்.''

(உரை.) மாநிலத்தீர்-பெரிய நில உலகத்தில் உள்ள மனிதர்களே!, ஆண்டு ஆண்டுதோறும் அழுது புரண்டாலும்-ஒவ்வோராண்டினும் வருந்திப் புரண்டாலும், மாண்டார் வருவரோ - இறந்துபோனவர்கள் திரும்பி வருவார்களோ, (வரமாட்டார்கள்) வேண்டா-(ஆகையால்) அழ வேண்டியதில்லை, நமக்கும் அது வழியே-நமக்கும் சாக்காடே வழியாகும், நாம் போம் அளவும்-நாம் இறந்து போகுமளவும், எமக்கு என் என்று-எமக்கு யாது தொடர்பு இருக்கிறதென்று, இட்டு உண்டு இரும்-பிச்சையிட்டு நீங்களும் கவலையற்று இருங்கள்.

(கருத்து.) இறந்தவர்களைக் குறித்து ஒவ்வோராண்டினும் அழுது வருந்தினாலும், அவர்கள் பிழைத்து வரமாட்டார்கள்; ஆகவே, இறந்தவர்களைக் குறித்து அழுவதால் பயனில்லை. (௧௦)

———

கஉ. வயிற்றுப்பசி

ஒருநாள் ஔவையார் ஓர் ஊரிலே இருந்து வெகு தொலைவில் உள்ள மற்றோர் ஊருக்கு வழி நடந்து கொண்டிருந்தார். இக் காலத்தைப்போல அக் காலத்திலே விரைந்து செல்லத்தக்க மோட்டார் முதலிய ஊர்திகள் இல்லை. செல்வநலம் படைத்தவர்கள் வண்டி, குதிரை, பல்லக்கு முதலியவற்றில் செல்வார்கள். மற்றையோர் வழிச் சாப்பாட்டிற்குக் கட்டுச்சோறு கட்டித் தூக்கிக்கொண்டு நடந்துதான் செல்லவேண்டும்.

ஔவையாருக்கோ வீடு வாசல்கள் இல்லை. ஊர் ஊராகச் சுற்றிக்கொண்டிருப்பவர். வழியிற் சாப்பிடுவதற்குக் கட்டுச்சோறு கட்டிக்கொண்டு போகும் வழக்கம் அவரிடம் இல்லை. வழி நடந்துகொண்டிருந்த ஔவையாருக்கு வயிற்றுப்பசி உண்டாகியது. வழி நடப்பவர்களுக்கு வயிற்றுப்பசி உண்டானால் அது மிகக் கடுமையாக இருக்கும். வயிற்றுப் பசிக்கு உள்ளாகிய ஔவையார் பக்கத்தில் ஊர் ஏதேனும் இருக்கிறதா என்று பார்த்தார். ஊர்கள் இல்லை; மனிதப் போக்குவரத்தே இல்லை. வயிற்றுப்பசியால் வாடிய ஔவையார் தமது வயிற்றையே பழித்துரைக்கத் தொடங்கினார்:

'என்னுடைய வயிறே! ஒருநாள் சாப்பாட்டை விட்டுவிடு என்றால் விட்டுவிடமாட்டாய். உணவு கிடைக்கிறபோது இரண்டு நாளைக்குச் சேர்த்துச் சாப்பிட்டுவிடு என்றால் அதையுங் கேட்கமாட்டேன்

என்கிறாய். என்னுடைய வருத்தம் உனக்குச் சிறிதும் தெரிவதில்லை. உன்னோடு சேர்ந்து யான் வாழ்வது, மிக அருமையான காரியம்'' என்று கூறினார். ஔவையார் இவ்வாறு தமது வயிற்றையே குறை சொல்லிக்கொண்டு போவதைக் கண்ட சில வழிப் போக்கர்கள் தமது கட்டுச் சோற்றிற் சிறிது ஔவையாருக்குக் கொடுத்து உண்ணச் செய்தனர்.

> "ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
> இருநாளுக் கேலென்றால் ஏலாய்—ஒருநாளும்
> என்னோ அறியாய் இடும்பைகூர் என்வயிறே
> உன்னோடு வாழ்தல் அரிது.''

(உரை.) இடும்பைகூர் என் வயிறே-துன்பத்தைச் செய்கின்ற என்னுடைய வயிறே!, ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய் - அகப்படாதபோது ஒருநாள் சாப்பாட்டை விட்டு விடுவாயாக என்று கூறினால் நான் கூறுவதைக் கேட்டு விட்டு விட மாட்டாய்!, இரு நாளுக்கு ஏல் என்றால் ஏலாய்-உணவு கிடைத்த போது இரண்டு நாட்கட்கு உரிய சாப்பாட்டைச் சாப்பிட்டுவிடு என்றால் அதனையுங் கேட்டுச் சாப்பிடமாட்டாய்; என்னோ ஒரு நாளும் அறியாய்-எனக்கு ஏற்படுகின்ற வருத்தத்தை நீ ஒரு நாளும் தெரிந்துகொள்ளமாட்டாய், உன்னோடு வாழ்தல் அரிது- ஆகவே உன்னோடு கூடி வாழ்க்கை நடத்துவது எனக்கு மிக அருமையாக இருக்கிறது.

(கருத்து.) வயிறானது ஒருநாள் உணவை விட்டிருக்க மாட்டாது. இரண்டு நாளைக்கு ஒன்றாக உணவை ஏற்றுக் கொள்ளவும் மாட்டாது. ஆகவே மிகக் கொடியதாகும். (கக)

———

கஎ. பழுதிலாப் பணி

ஒருநாள் சிலர் ஔவையாரைப் பார்த்துப் "பெரியீர்! இவ்வுலகில் குற்றமற்ற தொழில் யாது? அரசாங்க அலுவலில் அமர்ந்து அதிகாரஞ் செலுத்துவதா? அல்லது வாணிகம் முதலியவற்றில் ஈடுபட்டுப் பெரும்பொருள் தேடிக்கொண்டு சிறப்பாக வாழ்க்கை நடத்துவதா? எங்கட்கு ஏற்பட்டுள்ள ஐயத்தைப் போக்கியருளுங்கள்,'' என்று வேண்டிக் கொண்டனர்.

ஔவையார் அவர்களைப் பார்த்துப், "பெருஞ் செல்வராகி வாழ்தலும் அரசனிடம் அலுவல் பார்ப்பதும் மிகச் சிறந்த வாழ்க்கை என்று எண்ணுதீர்கள். நீர் வளம் பொருந்திய ஆற்றின் கரையில் சிறந்து வளர்ந்தோங்குகிற மரம் ஆற்றுநீரால் கரை சேதமுற்று வீழ்ந்து அழிந்துபோதலை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம் அல்லேமோ? அதைப்போல் அரசன் அறியும்படியாக வாழ்கிற சிறந்த வாழ்க்கையும் நிலைபெற்றிருப்பது பெரும்பாலும் ஐயந்தான். இவ்வுலகில் சிறந்த தொழிலாக நான் பயிர்த்தொழிலையே எண்ணுகிறேன். 'உயிர்த்தொழில் எல்லாம் பயிர்த்தொழில் தன்னுல்' என்று பெரியோர்கள் கூறியிருப்பதால் எல்லாருடைய வாழ்க்கைச் சிறப்பும் உழுதுண்டு வாழ்கிற வாழ்க்கைக்குள்ளே அடங்கியிருக்கிறது. இதற்குச் சிறிதும் ஐயமில்லை,'' என்று கூறினுர்.

"ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.''

(உரை) ஆற்றங் கரையின் மரமும் – ஆற்றின் கரையில் உள்ள மரமும், அரசு அறிய வீற்றிருந்த வாழ்வும்-அரசன் அறியப் பெருமையாகவாழ்கின்ற வாழ்க்கையும், விழும் அன்றே-அழிந்துவிடும் அல்லவா ? ஆகவே, ஏற்றம் உழுதுண்டுவாழ்வு-உயர்வைத் தரக்கூடியது உழுது பயிர்செய்து வாழ்கின்ற உழு தொழில் வாழ்க்கையே ஆகும், அதற்கு ஒப்பு இல்லை-அதற்கு நிகரான வாழ்க்கை வேறில்லை, வேறு ஓர்பணிக்கு-மற்றைய தொழில்கட்கு, பழுது உண்டு-ஏதாவது குற்றங்கள் இருக்கும் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

(கருத்து.) எத்தகைய சிறந்த வாழ்க்கையும் அழிந்து போகும். பயிர்த்தொழில் செய்து வாழும் வாழ்க்கையோ ஒப்பற்ற சிறப்பினையுடையதாகும். (கஉ)

— —

கச. மெய்கண்டாரும் வெள்ளையப்பனும்

ஓர் ஊரிலே மெய்கண்டார் என்னும் பெயருடைய முனிவர் ஒருவர் இருந்தார். அவர் தவத்தால் சிறந்து விளங்கினர். அவர் தமது வாக்கால் என்ன சொன்னாலும் அவ்வாறே நடக்கும். அவ்வூரிலே வெள்ளையப்பன் என்னும் பெயருடையவன் ஒருவன் இருந்தான். வெள்ளையப்பனுக்குப் பகைவனாக இருந்த ஒருவன் நாள்தோறும் செல்வம் வளரப்பெற்றுச் சிறந்தோங்கிக் கொண்டிருந்தான். வெள்ளையப்பனுடைய வீட்டில் அவனுடைய உறவினர்கள் அடிக்கடி இறந்து கொண்டிருந்தனர்.

ஒருநாள் வெள்ளையப்பன் மெய்யறிவுச் செல்வராகிய மெய்கண்டாரிடம் சென்றான். "பெரியீர்! இவ்வூரிலே என் பகைவனாக உள்ள இன்ன பெயருடையவன் நாள்தோறும் பொருள் வளரப்பெற்றுச் சிறந்த செல்வனாகிக் கொண்டு வருகிறான். அவன் வறியனாகும்படி நீங்கள் செய்துவிடுங்கள். என்னுடைய வீட்டிலே அடிக்கடி சாவு நேராமலும் இருக்கச் செய்யுங்கள்; இவ்வாறு செய்வீர்களானால் என் வீட்டிலேயே தங்கட்கு எப்பொழுதும் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் வீடுவீடாகப் பிச்சைக்குப் போகவேண்டிய தொல்லை இராது," என்று தன்னுடைய தீய எண்ணத்தை ஒருவாறு வெளியிட்டான்.

மெய்கண்டார் வெள்ளையப்பனுடைய நோக்கத்தை அறிந்துகொண்டு, "அப்பா, இந்த எண்ணத்தை விட்டு

விடு. நம்முடைய செயலால் யாதும் நடைபெறுவதில்லை. எல்லாம் இறைவன் திருவுளப்படியும் ஊழ்வினைப் படியுமே நடைபெறுகின்றன,'' என்று பலவாறு அறிவுரைகள் கூறினார். வெள்ளையப்பன் தனது மடமைக்கு நாணினான்.

"ஆவாரை யாரே அழிப்பார் அதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர்—ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்
மெய்யம் புவியதன் மேல்.''

(உரை.) அம்புவியதன்மேல் - அழகிய நிலவுலகத்திலே, மெய் - உண்மையாக, ஆவாரை அழிப்பார் யார் - வாழ்வதற்கு உரியவர்களை அழிக்கவல்லவர்கள் யாவர்; அதுவன்றி - அது வல்லாமல், சாவாரைத் தவிர்ப்பவர் யார் - இறத்தற்கு உரியவரை இறவாமல் நிறுத்தவல்லவர் யார்?; ஓவாமல் - ஒழியாமல், ஐயம் புகுவாரை - பிச்சைக்குச் செல்வோரை, விலக்குவார் யார் - தடுக்க வல்லவர் எவர்?

(கருத்து.) உலகில் நிகழுகிற காரியங்களெல்லாம் ஊழ்வினைப்படி நடைபெறுகின்றன. மனிதர்களின் முயற்சியால் யாதும் நடைபெறுவதில்லை. (கடு)

கரு. மானங்காத்த மன்னன்

ஓர் அரசன் பகைவர்களிடம் அகப்பட்டுக்கொண் டான். அகப்பட்டுக் கொண்ட அரசன் பெருஞ் சிறப் பொடு வாழ்ந்திருந்தவன். பகைவர்கள் அவனைச் சிறையில் அடைத்துவிட்டனர். சிறையில் அவனை நன்ருகக் கவனிக்கவில்லை. ஒருநாள் அரசனுக்கு நீர் வேட்கை மிகுதியாயிற்று. சிறைக்காவலனை அழைத்துச், "சிறிது தண்ணீர் கொண்டு வருவாயாக" என்று கூறினன். அச் சிறைக்காவலன் உடனடியாகக் கொண்டு வந்து கொடுக்கவில்லை. பல முறை வற்புறுத்திக் கேட்ட பின் இறுதியில் முணுமுணுத்துக் கொண்டு தண்ணீர் கொண்டு வந்தான். அதனை இடது கையால், "இந்தா பிடி," என்று சொல்லிக் கொண்டே நீட்டினன்.

சிறைக்காவலனின் மனப்பான்மை அரசனுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. இவ்வளவு கண்ணியக் குறை வாக நடந்துகொண்டானே என்று எண்ணி எண்ணி உள்ளம் புழுங்கினன். "நாம் இத் தண்ணீரைக் குடித்து உயிரோடிருந்து ஆகப்போகிறது என்ன? மானம் இழந்தபின் வாழாமை யன்ருே இனிது," என்று எண்ண மிட்டான். அத் தண்ணீரைக் குடிப்பதற்கு அவனுக்குச் சிறிதும் விருப்பமில்லை. அதனை அப்பால் வீசி விட்டான். தான் இறக்கும்வரை உண்ணு நோன்பை மேற்கொண்டிருந்து இறந்துபோனன்.

"பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி இடித்துண்கை—சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியா
துயிர்விடுகை சால வுறும்."

(உரை.) பேசுங்கால் - சொல்லுமிடத்து, பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை - பிச்சையெடுத்து உண்டலினும் இழிவிற் பெரிய குடிவாழ்க்கையாவது; பல இச்சை சொல்லி இடித்து உண்கை - பலவாகிய இச்சைகளைப் பேசி ஒருவரை நெருங்கி வாங்கி உண்ணுதலாம், சிச்சி - சீசீ இஃது என்ன செய்கை !, வயிறு வளர்க்கைக்கு - இப்படி வயிறு வளர்ப்பதைப் பார்க்கினும், மானம் அழியாது - மானங் கெடாமல், உயிர்விடுகை - உயிர் விடுதல், சால உறும் - மிகவுஞ் சிறந்ததாம்.

(கருத்து.) மிக இழிவான நிலையில் ஒருவர் வயிற்றை வளர்த்து உயிர் வாழ்வதினும், இறந்து போவதே மிகச் சிறப்புடையதாம். (கசு)

௧௬. சிவாயநம அடிகள்

ஓர் ஊரிலே துறவியொருவர் இருந்தார். எப்பொழுது பார்த்தாலும் அவர், "சிவாயநம; சிவாய நம" என்று சொல்லிக்கொண்டே இருப்பார். இதனால் அவருடைய பெயர் **சிவாயநம அடிகள்** என்று வழங்கியது. பெரும்பாலோர் சிவாயநம அடிகளைப் போற்றிப் பாராட்டி அவர் மிகப் பெரியவர் என்று சொல்லிக் கொண்டாடினர். சிலரோ "அவ்வாறு சொல்லுவதால் யாது பயன்? இது வீண்பகட்டே தவிர வேறு இல்லை. இவர் உலகத்தை ஏய்க்கிறார்," என்று சொல்லித் தூற்றினர்.

ஒருமுறை ஊரிலே கொடிய நச்சுநோய் ஒன்று தோன்றி மக்களைப் பெரிதும் வருத்தியது. பலர் மாண்டு தொலைந்தனர். பலர் நோய்க்கு ஆளாகி மாளாமலும் மீளாமலும் வாளா வருந்தித் தொல்லைப் பட்டனர். ஊரில் ஒருவரைக்கூட எஞ்சவிடாமல் வாட்டி வருத்திய அந்நோய் சிவாயநம அடிகளை ஒன்றுமே செய்யவில்லை. அவர் இருந்த பக்கத்தைக்கூட இந்நோய் எட்டிப் பார்க்கவில்லை இப் புதுமையைக் கண்டு பலரும் வியப்படைந்தனர்.

"சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை—உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்."

(உரை.) சிவாயநமவென்று சிந்தித்திருப்போர்க்கு — சிவாயநம என்று எண்ணிக்கொண்டிருப்பவர்கட்கு, ஒரு நாளும் அபாயம் இல்லை - ஒரு பொழுதும் துன்பம் உண்டாகாது, இதுவே - இஃதொன்றுமே, உபாயம் மதி - ஊழை வெல்லுதற்கேற்ற சூழ்ச்சியறிவாகும், அல்லாத எல்லாம் - இஃதொழிந்த மற்றவை, விதியே மதியாய் விடும் — ஊழ்வினையே அறிவாக முடிந்துவிடும்.

(கருத்து.) இறைவனை எண்ணியிருப்பவர்கட்கு எத்தகைய துன்பமும் உண்டாகமாட்டா. மற்றவர்கட்கு எச்செயலும் ஊழ்வினைப்படி நடக்கும். (கரு)

— —

௧எ. ஔவையாரும் குணநலன்களும்

ஔவையார் ஒருநாள் ஓர் ஊரில் உள்ள குளத்தில் தண்ணீர் குடித்தார். தண்ணீர் மிக இனிமையாக இருந்தது. மற்றொருநாள் வேறோர் ஊர்க் குளத்தில் தண்ணீர் குடிக்கச் சென்றார். தண்ணீரில் உப்புச்சத்து இருந்தது. அதனால் குடிக்க முடியவில்லை.

ஓர் ஊருக்குச் சென்றால் அவ்வூரில் உள்ள நல்லவர்களை அவர்களது கொடையினால் ஔவையார் எளிதாக உணர்ந்துகொள்வார். ஒருவருடைய கண்களைப் பார்த்தவுடனே அவர்கள் அருள் உள்ளவர்கள் இல்லாதவர்கள் என்பதையும் இவர் கண்டுபிடித்து விடுவார். மற்றவர்களைப் பற்றியும் அவர்களுடைய சில தன்மைகளைக் கொண்டே முழு இயற்கையையும் விளக்கமாகத் தெரிந்துகொள்வார். இச் செய்திகளையெல்லாம் தொகுத்துத்தான் பிறகு அடியில் வரும் செய்யுளை இயற்றினார்.

> "தண்ணீர் நிலநலத்தால் தக்கோர் குணங்கொடையால்
> கண்ணீர்மை மாறாக் கருணையால்—பெண்ணீர்மை
> கற்பழியா ஆற்றால் கடல்சூழ்ந்த வையகத்துள்
> அற்புதமாம் என்றே அறி."

(உரை.) *தண்ணீர் நிலநலத்தால் - தண்ணீரானது நிலத்தினது நன்மையினாலும், தக்கோர் குணம் கொடையால் - நல்லோருடைய குணமானது ஈகையினாலும், கண் நீர்மை மாறாக் கருணையால் - கண்களுடைய குணமானது நீங்காத அருளினாலும், பெண் நீர்மை கற்பு அழியா ஆற்றால் - பெண்*

களுடைய குணமானது கற்பு நிலை கெடாத வழியினாலும், கடல் சூழ்ந்த வையகத்துள் - கடல் சூழ்ந்த நிலவுலகினிடத்து, அற்புதம் ஆம் - வியக்கத்தக்க மேன்மையுடையனவாகும், என்று அறி - என்று நீ அறிவாயாக.

(கருத்து.) தண்ணீர் நிலத்தால் சிறப்படைகிறது; நல்லவர்கள் கொடையினால் சிறப்படைகிறார்கள்; கண்கள் அருளுடைமையால் சிறப்படைகின்றன; பெண்கள் கற்பினால் சிறப்புறுகிறார்கள். (கஅ)

கஅ. கடவுளை வெறுத்த காத்தபெருமாள்

பூங்குடி என்னும் ஊரிலே காத்தபெருமாள் என்னும் பெயருடையவன் ஒருவன் இருந்தான். அவன் பழவினைப் பயனாய் வறுமைக்கும் பலவகைத் தொல்லைகட்கும் உள்ளாகிப் பெரிதும் வருந்தினான். ஊரிற் பலர் செல்வச் சிறப்போடு நல்வாழ்வு வாழ்ந்துகொண்டிருத்தலைக் கண்டு உள்ளம் புழுங்கினான். கடவுள் தனக்கு மட்டும் நல்வாழ்வு கொடுக்காமல் வஞ்சித்து வருத்துவதாக எண்ணி, ‘‘ஓ கண்ணற்ற கடவுளே! அறிவற்ற தெய்வமே! உனக்கு ஏன் இந்த வஞ்சகம்? நான் உனக்கு என்ன தீமை செய்தேன்? எல்லாருக்கும் நல்வாழ்வைக் கொடுக்கிற நீ என்னை மட்டும் ஏன் வறுமைக்கும் பிணிகட்கும் உட்படுத்தி வருத்துகிறாய்? இனிமேலாவது இவ்வாறு வஞ்சகம் செய்யாமல் எல்லாருக்கும் நன்றாக அருள்புரி,’’ என்று கூறினான்.

காத்தபெருமாள் கழறியதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு பெரியவர், ‘‘அப்பா! வீணாகக் கடவுளை இகழாதே, கடவுள் எல்லாருக்கும் பொதுவானவர். அவர் ஒருவரை வாழ வைப்பதும், ஒருவரைத் தாழ வைப்பதும் இல்லை. வாழ்வும் தாழ்வும் அவரவர் ஊழினால் உண்டாகின்றன. அறஞ் செய்வதனால் எல்லா நன்மைகளும் உண்டாகும் என்பதை உணர்ந்து முற்பிறப்பில் நல்லறஞ் செய்யாதவர்கட்கு இப்பிறப்பில் செல்வமும் சிறப்பும் எவ்வாறு உண்டாகும்?’’ என்று கூறிப் பலவாறு அறிவுறுத்தினார்.

"செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்—வையத்து
அறும்பாவம் என்னவறிந் தன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல்."

(உரை.) வையத்துப் பாவம் அறும் என்ன அறிந்து - நிலவுலகிலே அறஞ்செய்தலினாலே தீவினை நீங்கும் என்று உணர்ந்து, அன்று இடார்க்கு - அக்காலத்திலே ஈயாதவருக்கு, செய்தீவினை இருக்க - செய்த பலவகைத் தீவினைகள் துன்பத்திற்கு விதையாக இருக்க, இன்று தெய்வத்தை நொந்தக்கால் - இப்பொழுது கடவுளை வெறுத்தால், இரு நிதியம் எய்தவருமோ— பெரும்பொருள் வந்து சேருமோ?, வெறும்பானை மேல் பொங்குமோ - வெறும்பானையை அடுப்பிலே வைத்து எரித்தால் மேலே பொங்கி வருமோ? பொங்கிவராது.

(கருத்து.) முற்பிறப்பில் அறஞ் செய்யாதவர்கட்கு இப்பிறப்பில் நன்மை உண்டாகமாட்டா. (கஎ)

கக. காளிமுத்தும் கள்ளர்களும்

பனங்குடி என்னும் ஊரிலே வெகுகாலத்திற்குமுன் **காளிமுத்து** என்னும் பெயருடைய பணக்காரன் ஒருவன் இருந்தான். அவன் அதற்கு முந்திய பிறப்புகளிலே செய்த நல்வினையினால் அவனுக்கு மிகுந்த செல்வம் உண்டாகியிருந்தது. காளிமுத்து மேலும் பல வாணிகங்கள் செய்து பொருளைப் பெருக்கினான். பொருளைப் பெருக்கினானே தவிர அருளைப் பெருக்கி அறவழிகளில் செலவிடவில்லை.

உறவினர்களைக்கூட அவன் நன்றாக ஆதரிக்கவில்லை. தன்னுடைய பெற்றோர்களை நன்கு காப்பாற்றாமல் விட்டுவிட்டான். பிள்ளைகள் சிலர் அவனுக்குத் தோன்றினர். அவர்களுடைய கல்விக்குத் தக்கவாறு செலவு செய்து படிக்கவைப்போம் என்றும் அவன் எண்ணவில்லை. மக்களையும் பெற்றோர்களையுமே அவன் கருத்துடன் காப்பாற்றவில்லை யென்றால் ஊரார்கட்கும் நண்பர்கட்கும் எவ்வாறு உதவி செய்வான்? அவன் பொருள் காக்கும் பூதமாகப் போனானே என்று பலரும் இரங்கினார்கள்.

இரவலர்கள் புலவர்கள் முதலியோர் காளிமுத்திடஞ் சென்று எவ்வளவோ பணிவாகவும் அடக்க ஒடுக்கமாகவும் "ஏதேனும் உதவி செய்தருளுங்கள்; வறுமையினால் துன்பப்படுகிறோம்," என்று கெஞ்சிக் கூத்தாடிப் பார்த்தனர். எதுவும் பலிக்கவில்லை.

காளிமுத்திடம் பெரும்பொருள் குவிந்திருப்பது எல்லாருக்கும் நன்கு தெரியும். கள்ளர்கள் காளி

முத்துவைப்பற்றிக் கருத்துச் செலுத்தினர். ஒருநாள் நள்ளிரவில் பன்னிரண்டு பேர் நல்ல தடிகளுடன் காளிமுத்துவின் வீட்டிற்குள் நுழைந்தனர். காளிமுத்துவுக்குப் பலமான அடி கிடைத்தது. அவன் உடலில் அடிவிழாத இடமே பாக்கியில்லை. காளிமுத்துவின் பொருள் ஒரு நொடிக்குள் கள்ளர் கைக்கு மாறிவிட்டது. காளிமுத்து யாதும் பேச்சு மூச்சு விடவில்லை.

"பெற்ளுர் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்ருர் உகந்தார் எனவேண்டார்—மற்ருேர்
இரணங் கொடுத்தால் இடுவர் இடாரே
சரணங் கொடுத்தாலுந் தாம்"

(உரை.) பேர் உலகில்-பெரிய நிலவுலகத்திலே, பெற்ருர்-தாய் தந்தையர், பிறந்தார் - பிள்ளைகள், பெருநாட்டார் - தம்முடைய ஊரினர், உற்ருர் - சுற்றத்தவர், உகந்தார் - நண்பர், என வேண்டார் - என்று விரும்பாதவராகிய பிசினர்கள், மற்ருேர் - யாதும் தொடர்பில்லாத பிறர், இரணம் கொடுத்தால் தம்முடம்பிலே காயத்தை உண்டு செய்தால், இடுவர் - தம்பொருளை அவருக்குக் கொடுப்பர், சரணம் கொடுத்தாலும் இடார் - முன் கூறப்பெற்றவர்கள் அடைக்கலம் புகுந்தார்களாயினும் அவருக்கு யாதுங் கொடுக்கமாட்டார்கள்.

(கருத்து) அறிவற்றவர்கள் தம்மை வருத்துகிறவர்கட்குத் தான் பொருள் உதவி செய்வார்களே தவிர உறவினர் முதலியவர்கட்கு எத்தகைய உதவியுஞ் செய்ய மாட்டார்கள். (கஅ)

———

௨0. எல்லாம் வயிற்றுப் பெருமான் பொருட்டு

நிரம்பவழகியார் என்னும் பெயருடைய ஒருமுனிவர் ஒரு பெரிய மலையிலே பதினாறு ஆண்டுகள் அருந்தவம் புரிந்துகொண்டிருந்தார். பிறகு அவருக்கு இறைவன் திருவருளும் மெய்யறிவும் உண்டாயின. அதன்பின் தவத்தைவிட்டு உலகத்தைச் சுற்றிப் பார்க்கத் தொடங்கினார்.

ஓரிடத்திலோர் எளியவன்ஒரு செல்வனைப்போற்றிப் பாராட்டிக்கொண்டிருந்தான். முனிவர் அந்த மனிதனைப் பார்த்து, "நீ அவனைப் போற்றி வழிபட்டுக் கொண்டிருக்கிறாயே! எதன் பொருட்டு?" என்று உசாவினார். "அவன் நல்ல பணக்காரன். சாப்பாட்டுக் கேதாவது தருவான். அதன்பொருட்டே அவனைப் போற்று கிறேன்." என்று கூறினான். பின்னர் ஒரு பிச்சைக் காரனைக்கண்டு, "நீயேன் பிச்சையெடுக்கிறாய்?" என்று உசாவினார். அவனும், "சாப்பாட்டுக்காகத்தான்," என்று கூறினான்.

பிறகு வெளிநாட்டுக்குச் சென்று பொருள் தேடிக்கொண்டு திரும்பிய ஒரு மனிதனைக் கண்டு, "எதற்குக் கடல் கடந்து சென்றாய்?" என்று உசாவினார். அவனுஞ், "சாப்பாட்டிற்காகத்தான்," என்றான். பிறகு ஓர் அரசனைக் கண்டு, "நீர் எதற்காக அரசாட்சி செய்கிறீர்?" என்று உசாவினார். அவ்வரசன், "சாப்பாட்டிற்காகத்தான் அரசாட்சியை மேற்கொண்டிருக்கிறேன்," என்றான். பிறகு செல்வர்கள்மீது புகழ்ச்சியாகப் பாடல்கள் இயற்றிக்கொண்டு அவர்

களின் வீடுதோறுந் திரிந்த ஒரு புலவரைக் கண்டு, "எதற்காக நீங்கள் இவ்வாறு பாடல்கள் இயற்று கிறீர்கள்?" என்று உசாவினார். புலவர், "எல்லாஞ் சாப் பாட்டிற்காகத்தான்," என்றார். இதனைக் கேட்ட முனிவர் "அந்தோ! இந்த உலகம் முழுவதும் உள்ள எல்லாரும் வயிற்றுப் பெருமான் பொருட்டு முயற்சி செய்கிறார்களே தவிர வறுமைக்கு நன்மை தரத்தக்க வீடுபேற்றின் பொருட்டு முயற்சி செய்வார் ஒருவரை யும் காணோமே," என்று சொல்லி வருந்திக்கொண்டே சென்றார்.

"சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல் கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம்."

(உரை.) வயிற்றின் கொடுமையால் - வயிற்றினுடைய பசிக் கொடுமையாலே, சேவித்தும் - பிறரைப் போற்றியும் சென்று இரந்தும்-பலரிடத்துச் சென்று ஐயமேற்றும், தெள்நீர்க் கடல் கடந்தும் - தெளிவாகிய நீரையுடைய பெரிய கடலைக் கடந்து வேறு நாடு சென்றும், பாவித்தும் ஒருவரைப் பெரிய வராகப் பாவித்தும், பார் ஆண்டும்-சில உலகத்தை அரசாட்சி செய்தும், பாட்டு இசைத்தும் - பிறரைப் புகழ்ந்து பாட்டுப் பாடியும், நாம் உடம்பை-நாம் நம்முடைய உடம்பை, நாழி அரிசிக்கே - நாழி அரிசியின் பொருட்டே, பாழின் - வீணாக, போவிப்பம் - செலுத்துகின்றோம்.

(கருத்து) இவ்வுலகத்தில் நடைபெறுந் தொழில்கள் யாவும் வயிற்றை நிரப்பும் பொருட்டே நடைபெறு கின்றன. (கக)

உக. நெற்குன்றவாணன்

தொண்டைமண்டலத்திலே சில நூற்றுண்டுகட்கு முன்னே **நெற்குன்றவாணன்** என்னும் பெயருடைய முதலியார் ஒருவர் இருந்தார். அவர் கள்ளங் கபடு வஞ்சகம் முதலிய தீய குணங்கள் சிறிதும் இல்லாதவர். ஏழை எளியவர்களிடத்திலே தண்ணருள் மிகுந்தவர். பிற உயிர்களை யெல்லாம் தம்முயிரைப் போலவே எண்ணும் இனிய தன்மையுடையவர்.

அவர் மிக நல்லவராக இருந்தபடியால் அவருக்குச் செல்வம் மிகுதியாகக் குவிந்தது. அழகிய வீடு வாசல்களைக் கட்டினர். விளைநிலங்கள் மிகுதியாகச் சேர்ந்தன. அதனுல் ஆண்டுதோறும் விளையும் நெல் மலைமலையாகக் குவிந்தது. அவ்வாறு நெல்லை மிகுதியாகப் பெற்றபடியினுலேதான் அவருடைய பெயர் நெற்குன்றவாணர் என்று காரணப் பெயராக அமைந்தது. அவர் நீண்ட நாள் உலகில் வாழ்ந்து ஏழை எளியவர்கட்குப் பேருதவியாக இருந்தார். வஞ்சமற்ற நெஞ்சையுடையவர் இனிய நலங்களைப் பெறுவார்கள் என்பதற்கு இம் முதலியாரே தக்க எடுத்துக் காட்டாக அமைந்தார்.

"நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும்—ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றும்
தருஞ்சிவந்த தாமரையாள் தான்."

(உரை.) சிவந்த தாமரையாள் - செந்தாமரையில் எழுந்தருளிய திருமகள், வஞ்சம் இலார்க்கு - வஞ்சமற்ற நெஞ்சினர்க்கு, நீரும் - நீர்வளத்தையும், நிழலும் - நிழல் வளத்தையும், நிலம் பொதியும் நெற்கட்டும் - நிலத்திலே நிறையும் நெற்போரையும், பேரும்-நல்ல பேரையும், புகழும்- கீர்த்தியையும், பெருவாழ்வும்-பெரிய வாழ்க்கையையும், ஊரும்-சிற்றூரையும், வருந்திருவும் - வளர்கின்ற செல்வத்தையும், வாழ்நாளும்- நிறைந்த வாழுநாளையும், என்றும் தரும் - எந்நாளும் கொடுத்தருள்வாள்.

(கருத்து.) வஞ்சமற்ற நெஞ்சம் உள்ளவர்கள் இவ்வுலகத்திலே எல்லா நலங்களையும் இனிது பெற்று வாழ்வார்கள். (௨0)

உ௨. பணத்தைப் புதைத்த பாவையர்

இங்குக் கூறப்பெறுகிற நிகழ்ச்சி சிலஆண்டுகளுக்கு முன்புதான் நடந்தது. ஓர் ஊரிலே தாயும் மகளும் ஆன இரண்டு பெண்கள் பொருள் தேடிப் பாதுகாக்க வேண்டும் என்று முடிவு செய்தார்கள். நிலத்தில் விளைந்த விளைபொருள்கள் ஆடு மாடுகள் வீட்டில் இருந்த தட்டுமுட்டுப் பொருள்கள் முதலிய கையில் கிடைத்தவற்றை யெல்லாம் விற்றுப் பணநோட்டாகச் செய்தார்கள். பத்துரூபா நோட்டுகளாக மூவாயிரம் ரூபா சேர்த்தார்கள்.

இப் பொருளை யாரிடத்திலும் கொடுத்து வைப்ப தற்கோ அல்லது பொருட்காப்பு நிலையத்தில் (பாங்கி) கொடுத்து வைப்பதற்கோ அவர்களுடைய உள்ளந் துணியவில்லை. வாங்குபவர்கள் எடுத்துக்கொண்டு ஏய்த்துவிட்டால் என்ன செய்வது என்று எண்ணி ஞர்கள். நோட்டுகளை ஒரு கள்ளிப் பெட்டியில் வைத்து வீட்டுக்குள் ஓரிடத்தில் புதைத்து வைத்து விட்டனர்.

ஐந்தாறு, திங்கள் சென்றன. புதைத்துள்ள நோட்டுகளை எடுத்து வெய்யிலில் காய வைத்துப் பிறகு புதைக்கலாம் என்று எண்ணினர். நிலத்தைத் தோண்டிப் பெட்டியைப் பார்த்தார்கள். பெட்டி நோட்டு முதலிய எல்லாவற்றையுங் கரையான் தின்று ஏப்பமிட்டு விட்டது.

தங்கள் பொருளுக்கு நேர்ந்த கதியைப் பார்த்துத் தாயும் மகளும் கோவென்று கதறிப் புலம்பினர்.

அழுதாற் பயனென்ன? எவ்வளவோ தொல்லைப் பட்டுப் பட்டினியும் பசியுமாகக் கிடந்து தொகுத்த அப் பொருள் போனது போனதுதான்.

"பாடுபட்டுத் தேடிப் பணந்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் —கூடுவிட்டிங்
காவிதான் போயினபின்பு யாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்."

(உரை.) பணத்தைப் பாடுபட்டுத் தேடி - பொருளை வருந்தி யுழைத்துச் சேர்த்து, புதைத்து வைத்து-உண்ணாமலும், அறஞ் செய்யாமலும் நிலத்திலே புதைத்து வைத்து, கேடு கெட்டமானிடரே-நன்மை யெல்லாவற்றையும் இழந்த மனிதர்களே, கேளுங்கள்-நான் கூறுவதைக் கேட்பீர்களாக, கூடு விட்டு - உடம்பினை விட்டு, ஆவிதான் போயின பின்பு - உயிர் நீங்கிய பிறகு, பாவிகாள்-தீவினையாளர்களே, அந்தப் பணம் - அந்தப் பொருளை, இங்கு ஆர் அனுபவிப்பார் - இவ்வுலகில் யார் அதனை நுகர்வார்கள்?

(கருத்து) பொருளைத் தாமும் நுகர்ந்து அறவழிகளிலுஞ் செலவிட வேண்டும். புதைத்துவைக்கும் பொருள் வீணாகப் போகும். (உக)

௨௫. கைக்கூலி பெற்ற நடுவன்

ஓர் ஊரிலே நீதிமன்றம் ஒன்று இருந்தது. அதற்கு நடுவனாக (வழக்குத் தீர்ப்பவனாக) அமைந்தவனுடைய பெயர் அறத்திருவன். பெயர்தான் அறத்திருவனே தவிரச் செயலில் மறத்திருவனாக விளங்கினான். அவன் தன்னிடம் வருகிற வழக்குகளை நன்றாக உசாவி நேர்மையான முறையில் முடிவு சொல்வதே இல்லை. யாராவது கைக்கூலி (இலஞ்சம்) கொடுப்பார்களாயின், அவர்கள் பக்கமாக முடிவு செய்துவிடுவான். இதனால் ஏழை எளியவர்கள் அறமுறை கிடைக்காமல் பெருந்தொல்லைக்கு உள்ளானார்கள்.

அறத்திருவனுக்குச் செல்வம் நன்கு பெருகிற்று. அவன் அதனைக் கண்டு மனம் மகிழ்ந்தான். "நமது செயல் தெய்வத்திற்குக்கூடப் பிடித்திருக்கிறது; அதனால்தான் நமக்குச் செல்வம் பெருகுகிறது," என்று உள்ளங் களித்தான். மறநெறியில் நடப்பவன் எவ்வாறு நன்றாக வாழமுடியும்? நாளடைவில் அறத்திருவனுக்கு அல்லல்கள் பல நேர்ந்தன. அவன் கைக்கூலி பெற்றுக்கொண்டு மறநெறியில் நடக்கிறான் என்னும் செய்தி அரசனுக்குத் தெரிந்தது. அரசன் உடனே மிகுந்த சினங்கொண்டான். அவனை வேலையிலிருந்து நீக்கிவிட்டு நடுநிலை பிறழாத வேறொருவனை முறைமன்றத் தலைவனாக ஏற்படுத்தினான்.

அறத்திருவன் பதவியிழந்ததும் செல்வம் கரையத் தொடங்கிற்று. அவன் எளிய நிலையை அடைந்தான். அவனால் முன்பு வழக்கிழந்த பலர் அவனுக்கு

அல்லல்கள் பல செய்தார்கள். அறத்திருவன் நாளை டைவில் ஊரைவிட்டு ஓடிப்போனுன். அவனுடைய மனைவி மக்களும் சிதறிப்போனார்கள். அவன் குடியிருந்த வீட்டைக்கூட யாருந் திரும்பிப் பார்க்கவில்லை. அது பாழடைந்து பேய் பூதங்களுக்கும் பாம்பு முதலியவற்றுக்கும் இருப்பிடமாகிவிட்டது. இடிந்துபோன பகுதியில் பாதாள மூலி வெள்ளெருக்கு முதலியவையும் முளைத்தன.

> "வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
> பாதாள மூலி படருமே—மூதேவி
> சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
> மன்றோரஞ் சொன்னர் மனை."

(உரை.) மன்று ஓரஞ்சொன்னுர் மனை - தரும சபையிலே ஓரஞ் சொன்னவருடைய வீட்டில், வேதாளம் சேரும் - பேய்கள் வந்து சேரும், வெள்ளெருக்குப் பூக்கும்-வெள்ளெருக்கு முளைத்து மலரும், பாதாள மூலி படரும் - பாதாள மூலி என்னும் கொடியானது படரும், மூதேவி சென்று இருந்து வாழ்வள் - மூதேவியானவள் போய் நிலைபெற்று வாழ்வாள், சேடன் குடிபுகும்-பாம்புகள் குடியிருக்கும்.

(கருத்து.) அறநெறியில் தவறி நடந்தவர்கள் வாழ்ந்திருந்த இருப்பிடங்கூட நன்னிலையில் விளங்கமாட்டாது.

---

௨௪. ஐந்து புலவர்கள்

ஒரு நாள் ஓரிடத்தில் ஐந்து புலவர்கள் அமர்ந்து உரையாடிக்கொண்டிருந்தார்கள். ஐந்து பேரும் ஐந்து வகையான தங்கள் எண்ணங்களைப் பின்வருமாறு வெளியிட்டார்கள் :

அவர்களுள் ஒரு புலவர் சைவப் பழம். அவர் எப்பொழுதுந் திருநீறு அணிதல் வேண்டும் என்னுங் கொள்கையுடையவர். அவர் தமது கொள்கையை வற்புறுத்திப் பேசினார். மற்றொரு புலவருடைய கொள்கை, நெய் இல்லாமல் சாப்பிடக்கூடாது; அவ்வாறு சாப்பிட்டால் அந்த உணவு பயனளிக்காது என்பது. அவர் தமது எண்ணத்தை வற்புறுத்திப் பேசினார். மற்றொரு புலவருடைய நோக்கம் ஆற்றில் நீராடுதல் வேண்டும். ஆற்றுநீர்தான் அருமையானது, ஆறில்லாத ஊர் வீண் என்பது. இவர் தமது எண்ணத்தை வலியுறுத்திப் பேசினார்.

வேறொரு புலவர் கொள்கை 'ஒவ்வொருவருக்கும் உடன்பிறந்தார்கள் இருத்தல் வேண்டும்; உடன் பிறப்பற்றவர்கள் இருத்தல் வேண்டும்; உடன் பிறப்பற்றவர்கள் எதற்கும் உதவார்' என்பது. இவர் தமது கருத்தைப் புலப்படுத்திப் பேசினார். ஐந்தாவது புலவர் நோக்கம் 'ஒவ்வோர் இல்லத்திலும் பெண்கள் இருத்தல் வேண்டும். பெண்கள் இருந்தால்தான் வீட்டுக் காரியங்கள் நன்றாக நடைபெறும். பெண்கள் இல்லாத வீடு பாழடைந்த வீடே' என்பது. இவர் இதனை அழுத்திக் கூறினார்.

இப் புலவர்களுடைய உரையாடல்களைக் கேட்டுக் கொண்டே அங்குச் சென்றார் ஔவையார். அந்தச் சமயத்தில்தான் பின்வரும் பாட்டு ஔவையார் உள்ளத்தில் தோன்றியது.

"நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா உண்டிபாழ்
ஆறில்லா ஊருக்கு கழகுபாழ்—மாறில்
உடன்பிறப் பில்லா உடம்புபாழ் பாழே
மடக்கொடி இல்லா மனை."

(உரை.) *நீறு இல்லா நெற்றி பாழ்*-திருநீறு இல்லாத நெற்றி பாழாகும், *நெய் இல்லா உண்டி பாழ்* - நெய்யில்லாத சாப்பாடு பாழேயாகும், *ஆறு இல்லாத ஊருக்கு அழகு பாழ்* - ஆற்றைப் பெறாத ஊரினுடைய அழகும் பாழேயாகும், *மாறு இல் உடன்பிறப்பு இல்லா உடம்பு பாழ்* - மாறுபடாத உடன் பிறந்தார் இல்லாத உடம்பு பாழாகும், *மடக்கொடி இல்லா மனை பாழே* - இல்லத்திற்குத் தக்க பெண்கள் இல்லாத வீடும் பாழேயாகும்.

(கருத்து.) திருநீறிட வேண்டும். உணவில் நெய் சேர்த்துக் கொள்ளவேண்டும். ஊரையடுத்து ஆறு இருக்கவேண்டும். ஒவ்வொருவரும் உடன்பிறந்தவர்களைப் பெற்றிருத்தல் வேண்டும். இல்லத்தில் பெண்கள் இருக்கவேண்டும். (உ௩.)

———

௨௫. பெருஞ்செலவு செய்த பெரியண்ணன்

வரகூர் என்றும் ஊரிலே பெரியண்ணன் என்னும் பெயருடையவன் ஒருவன் இருந்தான். பெரியண்ணன் வீண்செலவு செய்வதில் வல்லவன். ஒரு ரூபா கிடைத்தால் இரண்டு ரூபா செலவு செய்வான். இரண்டு ரூபா கிடைத்தால் நான்கு ரூபா செலவு செய்வான். இவ்வாறே அவனுடைய செலவு வரவுக்கு மேல் ஒரு பங்கு மிகுதியாக இருக்கும்.

"வரவுக்குமேல் செலவு செய்தல் கூடாது அவ்வாறு செய்தால் பலவகையான தொல்லைகள் உண்டாகும்," என்று பலர் பெரியண்ணனுக்கு அறிவுரை கூறினார்கள். அவன் அவ்வுரைகளையெல்லாம் காதிற் போட்டுக்கொள்ளவில்லை. யாரேனும் கடன் கொடுப்பவர்கள் இருந்தால் அவர்களிடமெல்லாம் கடன் வாங்கிச் செலவு செய்வான். பிறகு கடன் கொடுத்தவர்கள் கடனைத் தரச்சொல்லி நெருக்கி வருத்துவார்கள். கொடுத்தவர்கட்குத் திருப்பிக்கொடுக்க வகையில்லாமல் விழிப்பான். அவர்கள் இவனுடைய பெருமைக்குச் சிறுமை வருமாறு நடந்து கொள்வார்கள். பெரியண்ணன் எல்லாவற்றையும் பட்டுக் கொள்வான்.

நாளடைவில் வரகூர் சரிப்பட்டு வரவில்லை. வேறு ஊர்கட்குச் சென்றான். அவ்விடத்திலும் ஒத்துக் கொள்ளாமல் ஊர் ஊராகச் சுற்றித் திரிந்தான். அவனுடைய மனைவி மக்களும் அவனை மிகவும் வெறுத்தார்கள். பெரியண்ணன் பல வகையான தொல்லைகளை அடைந்து வருந்தியபின் மாண்டு தொலைந்தான். அவன்

இவ்வாறு வீண்செலவு செய்து அழிந்தொழிந்தானே என்று பலரும் வருந்தினார்கள்.

"ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாய் ஏழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு."

(உரை.) ஆன முதலில் அதிகம் செலவு ஆனால் - தனக்குக் கிடைத்த முதற் பொருளுக்குச் செலவு அதிகமானவன், மானம் அழிந்து-மானங் கெட்டு, மதி கெட்டு - அறிவு இழந்து, போன திசை எல்லார்க்கும் கள்ளன் ஆய் - தான் ஓடிப்போன திக்கினும் எல்லோர்க்குங் கள்ளனைப் போல் ஆகி, ஏழ்பிறப்பும் தீயன் ஆய் - எழுவகைப் பிறப்புகளினும் கொடியவனாகி, நல்லாருக்கும் பொல்லனாம் - தன்னிடத்தில் அன்புவைத்த பெண்கட்கும் பொல்லாதவனாவான், நாடு - இதனைத் தெரிந்து கொள்.

(கருத்து.) ஒவ்வொருவரும் தமது வருவாய்க்குத் தக்கவாறு செலவு செய்தல் வேண்டும். பெருஞ்செலவு செய்தால் பிறகு வருந்தி அழிய நேரிடும். (உச)

௨௯. தவமுனிவர்

ஒரு காட்டிலே ஒரு முனிவர் தவஞ்செய்து கொண்டிருந்தார். அவர் மிகுந்த மனவுறுதி படைத்தவர். அளவற்ற பெருமையுடையவர். சீரிய நூல்களைக் கற்று மெய்யறிவு கைவரப் பெற்றவர். அவர் ஆண்டுக் கணக்காகத் தவஞ்செய்து கொண்டிருப்பார். பல ஆண்டுக்கு ஒருமுறை எப்பொழுதாவது தவத்தில் இருந்து எழுவார். அப்பொழுது அவருக்குப் பசியெழும். எங்காவது சென்று ஒருவேளை சாப்பிட்டுவிட்டு மீண்டும் வந்து தவத்தில் அமர்ந்து விடுவார்.

ஓராண்டில் முனிவர் தவத்தைவிட்டு எழுந்தார். வயிற்றுப்பசி மிகுதியாக இருந்தது. உணவுக்காக வெளியே புறப்பட்டார். அப்பொழுது மழையில்லாமல் எங்கும் கொடிய பஞ்சம் ஏற்பட்டிருந்தது. அதனால் முனிவருக்குச் சாப்பாடு எங்கும் அகப்படவில்லை. பல விடங்களினுஞ் சுற்றிப்பார்த்தார்; ஓரிடத்தில் ஒரு நாய் செத்துக்கிடந்தது. பசிக் கொடுமையால் கலங்கிய முனிவர் அந்த நாயின் ஊனை உண்ணத் துணிந்தார்.

முனிவருடைய தவப் பெருமை, குலப்பெருமை, ஞானப் பெருமை முதலிய எல்லாப் பெருமைகளும் வயிற்றுப் பசிக்குமுன் பறந்துபோய்விட்டன. முனிவருடைய செய்கையைப் பார்த்து இந்திரன் மழை பொழியச் செய்தான். பிறகு மழை பொழிந்து நாடு செழித்தது. வயிற்றுப்பசியின் கொடுமை இத்தகையதென்பதை உலகம் இம் முனிவரிடமிருந்து நன்கு உணர்ந்து கொண்டது.

"மானங் குலங்கல்வி வண்மை அறிவுடைமை
தானந் தவம்உயர்ச்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்."

(உரை.) பசிவந்திட - பசிநோய் வந்தால், மானம் - மானமும், குலம் - குடிப்பிறப்பும், கல்வி - கல்வியறிவும், வண்மை-ஈகையும், அறிவுடைமை - அறிவுடைமையும், தானம்-தானமும், தவம் - தவமும், உயர்ச்சி - உயர்வும், தாளாண்மை - தொழின்முயற்சியும், தேனின் கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் - தேன்போலும் இனிமை பொருந்திய சொல்லை யுடைய மங்கையர்மேல் காதல் கொள்ளுதலும், (ஆகிய) பத்தும் பறந்து போம்-பத்தும் விரைவாக நீங்கிப்போகும்.

(கருத்து.) வயிற்றுப் பசிக்குமுன் எல்லாப் பெருமைகளும் அழிந்து ஒழியும். (உ௬)

உள. தெய்வச்செயல்

ஒரு வேடன் வேட்டையாடக் காட்டிற்குச் சென்ருன். ஓரிடத்தில் ஒரு மானைக் கண்டான். அதனைப் பிடித்துவிட்டால் இரண்டொரு நாளைக்கு உணவுக் கவலை இல்லாமல் இருக்கலாம் என்று முடிவுசெய்தான். அம் மானைத் துரத்திக்கொண்டு மிகு விரைவாக ஓடினான். மானை எப்படியாவது பிடித்துவிட வேண்டுமென்னும் பரபரப்பினால் எதனையும் பாராமல் விழுந்தடித்து ஓடினான். அந்த மானோ இன்றைக்கு நாம் இறந்தொழிந்தோம் என்னும் அச்சத்தினால் பறந்தோடியது.

வழியில் ஓரிடத்தில் கிணறு ஒன்று புதர்களால் மூடப்பட்டிருந்தது. விரைந்தோடிய வேடன் அக்கிணற்றில் விழுந்தான். அக் கிணறு மிக ஆழமாக இருந்ததன்றி மிகுந்த சேருகவும் இருந்தது. வேடன் விழுந்த விரைவினால் அப்படியே சேற்றுக்குள் அழுந்திவிட்டான். அவனால் தலையைக்கூட மேலே தூக்கமுடியவில்லை. சிறிதுநேரத்தில் திக்கு முக்காடி மாண்டுபோனான்.

மான் உயிர்பிழைத்து ஓடிப்போய்விட்டது. ஆகவே, நாம் நினைக்கிற எல்லாம் நமது எண்ணப்படியே முடிவதில்லை. எல்லாம் கடவுளின் திருவுளப்படிதான் இவ் வுலகத்திலே நடைபெறுகிறது. இதனை உணர்ந்து கொள்ளாமல் ஒவ்வொருவரும் எவ்வளவோ மனக்கோட்டைகளைக் கட்டி இறுதியில் அவை நிறைவேறப் பெருமல் மிகுந்த மன வருத்தத்திற்கும் துன்பத்திற்கும் உள்ளாகிருர்கள்.

"ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்."

(உரை.) ஒன்றை நினைக்கின்-ஒரு பொருளைப் பெற நினைத்தால், அது ஒழிந்திட்டு ஒன்றாகும்-அப் பொருள் கிடையாமல் வேறொரு பொருள் கிடைத்தாலும் கிடைக்கும், அன்றி அது வரினும் வந்து எய்தும்-அப்படியல்லாமல் அப் பொருளே வந்து கிடைத்தாலும் கிடைக்கும், ஒன்றை நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும்-மேலும் ஒரு பொருளை நினையாதிருக்கு முன்னே அது தானே வந்து நின்றாலும் நிற்கும், எனையாளும் ஈசன் செயல்-இவையெல்லாம் என்னையாண்டருளும் கடவுளுடைய செய்கைகளாகும்.

(கருத்து.) இவ்வுலகத்தில் நிகழும் எல்லாச் செயல்களும் தெய்வத் திருவருளின்படியே நடைபெறுகின்றன. (உ௯)

———

௨௪. வீண் அவா

ஓர் ஊரிலே **தம்பியப்பன்** என்னும் பெயருடையவன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் பொருட் செல்வம் மிகுதியாக இல்லை. தந்தை தேடிய பொருளாக ஐந்நூறு ரூபாக்கள் தாம் கிடைத்தன. அப்பொருளை முதற் பொருளாக வைத்துக்கொண்டு கண்ணாடிப் பொருள்கள் வாங்கி வாணிகம் செய்து முன்னுக்கு வரலாம் என்று முடிவு செய்தான். ஐந்நூறு ரூபாக் களுக்கும் கண்ணாடிப் பொருள்களை வாங்கி ஒரு பெரிய கூடையில் வைத்துக் கடை வைத்தான்.

கடையில் உட்கார்ந்த தம்பியப்பனுடைய மனம் வீணான அவாவிலும் எண்ணத்திலும் ஓடியது. "நான் இந்தப் பொருள்களை இரட்டிப்பான விலைக்கு விற்றால் ஆயிரம் ரூபா கிடைக்கும். பிறகு ஆயிரம் இரண்டாயிர மாகும். இப்படியே செல்வம் பெருகிக் கொண் டிருக்கும். நான் பெரிய வீடு வாசல்களைக் கட்டிக் கொண்டு மிகுந்த சிறப்புடன் வாழ்ந்து கொண்டிருப் பேன். எனது செல்வத்தைக் களவு செய்வதற்குக் கள்ளர்கள் இரவிலே வருவார்கள். அவர்களைத் தடியை எடுத்து நன்கு புடைப்பதோடு, 'ஓடுங்கள் ஓடுங்கள்' என்று சொல்லி இவ்வாறு காலாலும் பலமாக உதைப்பேன் என்று எண்ணமிட்டுக்கொண்டே எதிரில் இருந்த கூடையை ஓங்கி உதைத்தான். கண்ணாடிப் பொருள்களெல்லாம் உடைந்து காச மாயின.

தம்பியப்பன் வீண் எண்ணத்தில் இருந்து திடீ ரென்று விழித்துக்கொண்டான். தம்பியப்பனுடைய கதையைக் கேட்டவர்கள் விழுந்து விழுந்து நகைத் தார்கள். கைப்பொருளையும் இழந்துவிட்ட தம்பியப்பன் பிறகு பலவகையான தொல்லைகளை யடைந்து வருந்தித் திரிந்தான்.

“உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடி நினைந் தெண்ணுவன—கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையுஞ் சஞ்சலமே தான்.”

(உரை.) உண்பதுநாழி - சாப்பிடுவது ஒரு நாழி அரிசிச் சோறேயாகும், உடுப்பது நான்கு முழம்-அரையிலே கட்டுவது நான்கு முழ வேட்டியேயாகும், (இவ்வாறாகவும்), நினைந்து எண்ணுவன எண்பதுகோடி-நினைத்து எண்ணும் காரியங்களோ எண்பதுகோடியாக இருக்கின்றன, (ஆகையினால்) கண்புதைந்த-மனக் கண் குருடாக இருக்கிற, மாந்தர் குடிவாழ்க்கை-மக்களின் குடி வாழ்க்கையானது, மண்ணின் கலம்போல-மட்கலம்போல, சாந்துணையும் இறக்குமளவும், சஞ்சலமே-துன்பந்தருவதாகவே இருக்கிறது.

(கருத்து.) மக்கள் எண்ணும் வீண் எண்ணமானது அவர்கள் சாகும் வரையிலும் அவர்களுக்கு மிகுந்த துன்பத்தை அளிப்பதாக இருக்கிறது. (உஎ)

———

உகூ. சடையப்ப முதலியார்

முன்னாளில் **சடையப்ப முதலியார்** என்னும் பெயருடைய செல்வர் ஒருவர் திருவெண்ணெய் நல்லூரிலே வாழ்ந்திருந்தார். அவருக்குச் செல்வம் மிகுதியாக இருந்தது.

செல்வத்தைப் பெற்றவர்கள் செய்யவேண்டியது நல்லறம். இதனை நன்குணர்ந்த சடையப்ப முதலியார் தரமும் அறஞ்செய்தலை மேற்கொண்டார். ஏழை எளியவர்கள் வந்தால் அவர்கட்கு எந்த வேளையிலும் உணவிட்டார். பொருளை விரும்பியவர்கட்குப் பொருளுங் கொடுத்தார். அதனால் அவருடைய புகழ் எங்கும் பரவிற்று. எப்பொழுதும் பலபேர் முதலியார் வீட்டில் கூட்டமாக இருந்துகொண்டே இருந்தனர். பழையவர்கள் பத்துப்பேர் புறப்பட்டுச் சென்றால் புதியவர்கள் இருபதுபேர் வந்து கூடுவார்கள். எவ்வளவுபேர் வந்தாலும் முதலியார் சிறிதும் தயங்காமல் அவர்கள் விரும்பியவற்றைக் கொடுத்துப் பெரும் புகழ் பெற்றார்.

கம்பராமாயணத்தைப் பாடிய கம்பநாட்டாழ்வாரைப்போற்றி ஆதரித்தவரும் இவர்தாம். உலகத்தார் அனைவரும் இவருக்கு உறவினராகவே அமைந்திருந்தார்கள். சடையப்ப முதலியார் இத்தகைய பரந்த மனப்பான்மையுடையவராக அமைந்திருந்தபடியினால் தான் கம்பராமாயணம் என்னும் அரிய நூல் தோன்றுவதற்கு ஏதுவாயிற்று. ஆகவே, ஒவ்வொருவரும் மற்றவர்கட்குத் தக்கவாறு உதவிசெய்து அவர்களை உறவினராகக் கொள்ளுதல் வேண்டும்.

"மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவரு மங்கில்லை—சுரந்தமுதம்
கற்றா தரல்போல் கரவா தளிப்பரேல்
உற்றார் உலகத் தவர்."

(உரை.) மரம் பழுத்தால் - மரம் பழுத்திருந்தால், வா என்று-பழத்தைத் தின்பதற்கு வருவாயாக என்று, வௌவாலைக் கூவி இரந்து அழைப்பார்-வௌவாலைக்கூவி வேண்டி அழைப்பவர், அங்கு யாவரும் இல்லை - அம் மரத்தினிடம் ஒருவரும் இல்லை, கன்று ஆ அமுதம் சுரந்து தரல்போல் - கன்றையுடைய ஆவானது பாலைச் சுரந்து கொடுத்தலைப்போல, கரவாது அளிப்பரேல்-ஒளிக்காமற் கொடுப்பாராயின், உலகத்தார் (அவ்வௌவாலைப் போல) தாமே வந்து உறவினராவர்.

(கருத்து.) பிறருக்கு உதவி செய்பவர்களைக் கண்டால் பிறர் தாமே வந்து அவர்களைச் சூழ்ந்திருப்பர். (உஅ)

---

௧௦. அரசனுக்கு அறிவுரை

ஓர் அரசனை அவனுடைய பகையரசன் எதிர்த்துப் போராடினான். இருவருக்கும் போர் கடுமையாக நடைபெற்றது. முதலரசனுடைய பெயர் பூங்குன்றன். அவனுக்கு எதிரியாக வந்து எதிர்த்துப் போராடிய பகையரசனுடைய பெயர் நெடுந்தத்தன். நெடுந்தத்தனுடைய படை பெரிதாகவும் போர்த்திறம் உடையதாகவும் இருந்தது. ஆகவே, பூங்குன்றன் எளிதில் தோல்வி அடைந்தான். நெடுந்தத்தன் பூங்குன்றனை நெடுந்தொலை விரட்டி அடித்துவிட்டு அவனுடைய நாட்டையும் கைப்பற்றிக்கொண்டான்.

பூங்குன்றனுக்கு யாது செய்வதென்று தெரியவில்லை. பல காடுகளிலும் மலைகளிலும் சுற்றித் திரிந்தான். ஒரு நாள் ஒரு முனிவரைக் கண்டான். அம்முனிவரிடம் தன் குறைகளையெல்லாஞ் சொல்லி வருந்தினான். அம் முனிவர் மெய்யறிவு கைவரப்பெற்றவர். ஒருவரையும் ஒருபொருட்படுத்தமாட்டார். ஒருவரைப் பகையாகவும் ஒருவரை நட்பாகவும் எண்ணமாட்டார்.

அம் முனிவர் பூங்குன்றனைப் பார்த்து, "அன்பனே! ஒவ்வொருவருந் தாந்தாஞ் செய்த வினையைத் தாமே நுகர்ந்துதான் தீரவேண்டும். நான்முகனுடைய எழுத்துத் தவறாது. நெடுந்தத்தன் உன்னை வருத்தி நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான் என்று அவனிடம் பகை பாராட்டாதே. நாம் நம்முடைய ஊழ்வினையை வெறுக்க வேண்டுமே தவிர, ஊழ்வினையின்

பலனை ஊட்டுவித்தவர்களை வெறுத்தல் கூடாது. உலகத்தார் எல்லாரும் ஒன்ருகச்சேர்ந்து ஒருவனுடைய ஊழ்வினையை விரட்டினாலும் அது தன் பலனைக் கொடுக்காமல் போகமாட்டாது,'' என்று அறிவுரைகள் கூறினர்.

''தாந்தாமுன் செய்தவினை தாமே அனுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே—வேந்தே
ஒறுத்தாரை என்செயலாம் ஊரெல்லாம் ஒன்ரு
வெறுத்தாலும் போமோ விதி.''

(உரை.) வேந்தே-அரசனே!, தாம்தாம் முன்செய்த வினை - தாம்தாம் முற்பிறப்பிலே செய்த நல்வினை தீவினைகளை, பூந்தாமரையோன் பொறி வழியே - தாமரை மலரில் இருக்கின்ற நான்முகன் விதித்தபடியே, தாமே அனுபவிப்பார்-தாமே நுகர்வார்கள், ஒறுத்தாரை என் செயலாம் - தீவினையாலே தூண்டப்பட்டுத் தீங்கு செய்தவரை நாம் யாது செய்யலாம், ஊர் எல்லாம் ஒன்ரு வெறுத்தாலும் விதி போமோ - ஊரிலுள்ளோர் எல்லாருந் திரண்டு வெறுத்தாலும் ஊழ்வினை போகுமா?

(கருத்து.) முற்பிறவிகளில் செய்த நல்வினை தீவினைகளின் பலனை ஒவ்வொருவரும் நுகர்ந்துதான் தீரவேண்டும். (உக)

௫௧. போலிப்புலவனும் வள்ளலும்

ஓர் ஊரிலே போலிப்புலவன் ஒருவன் இருந்தான். அவனுடைய பெயர் திருமேனியழகன். திருமேனியழகன் தன்னுடைய பெயருக்கேற்பப் பார்வைக்கு அழகாய் வெளிப்பகட்டாய் இருந்தானே யொழிய அவனுக்குக் கல்வியறிவு போதிய அளவு இல்லை. ஏதோ சில நூல்களை மேலெழுந்தபடி தானாகப் படித்ததுதான். இந்த அளவிலேயே அவன் தன்னைப் பெரும்புலவனாக எண்ணித் தருக்கித் திரிந்தான். மனம் போனபடி செய்யுட்களை இயற்றவுந் தொடங்கினான். கல்வியறிவற்ற செல்வர்கள்மீது கன்னாப்பின்னா என்று பாட்டுகள் எழுதிப் பொருள் பெற்று வாழ்வதே அவனுடைய வாழ்க்கையாக முடிந்தது. இவனுடைய பாட்டைக் கேட்டவர்களெல்லோரும் அறிவற்றவர்களாதலினால் ஏதேனும் சிறிது பொருள் கொடுத்து அனுப்புவார்கள்.

திருமேனியழகன் ஒருநாள் ஒரு பெருஞ் செல்வன் மீது சில செய்யுள்கள் இயற்றிக்கொண்டு போனான். அச் செல்வன் மற்றைச் செல்வர்களைப்போல் பண மூட்டையாகமட்டும் இருக்கவில்லை. அறிவு மூட்டையாகவும் இருந்தான். பல நூல்களைப் படித்து உணர்ந்திருந்தான். பாடல்கட்குத் தானே பொருள் கண்டுணர்ந்து கொள்வான். தப்புத் தவறுகள் இருக்குமானால் அதையுங் கண்டுபிடித்து விடுவான்.

திருமேனியழகன் தன்னுடைய பாட்டை அச் செல்வனிடங் கொண்டுபோய்ப் படித்தான். உடனே

அச் செல்வனுக்கு மிகுந்த சினம் உண்டாகிவிட்டது. "நன்றாகப் படிக்காத நீ ஏன் பாட்டியற்றத் தொடங்கினாய்? சொல்ல வேண்டிய செய்திகளை உரைநடையாகச் சொல்லித் தொலைக்கக் கூடாதா? தப்புந் தவறுமாகப் பாடுவதைவிடப் பாடாமல் இருப்பது நல்லது. உயர்குலத்தில் பிறத்தலைவிடத் தாழ் குலத்தில் பிறந்து நல்லொழுக்கம் உடையவனாக இருப்பது நல்லது; ஆண்மையற்றவனாக இருப்பதைவிட நோயாளியாக இருப்பது நல்லது," என்று இப்படிப் பலவாறு அறிவுரை கூறித் திருமேனியழகனுக்குப் பாடஞ் சொல்லத் தொடங்கிவிட்டான். திருமேனியழகன் செல்வனிடமிருந்து பரிசைக்கூட எதிர் பார்க்கவில்லை. ஆளைவிட்டாற் போதுமென்று ஓடிவிட்டான்.

> "இழுக்குடைய பாட்டிற்கு இசைநன்று சாலும்
> ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று — வழுக்குடைய
> வீரத்தின் நன்று விடாநோய் பழிக்கஞ்சாத்
> தாரத்தின் நன்று தனி."

(உரை) இழுக்குடைய பாட்டிற்கு இசைநன்று - இலக்கண வழுக்களையுடைய செய்யுளினும் அஃதில்லாத பேச்சு நல்லது, உயர்குலத்தின் சாலும் ஒழுக்கம் நன்று - உயர்ந்த குலத்தில் பிறத்தலைப் பார்க்கினும் ஒழுக்கம் உடையவனாக இருத்தல் நல்லது, வழுக்கு உடைய வீரத்தின் விடா நோய் நன்று - தவறுதலையுடைய வீரத்தினும் தீராத நோய் நல்லது, பழிக்கு அஞ்சாத் தாரத்தின் தனி நன்று - பழிச்சொல்லுக்கு அஞ்சாத மனைவியோடு கூடி வாழ்தலைப் பார்க்கினும் தனியே இருத்தல் நல்லது.

(கருத்து.) ஒவ்வொரு பொருளும் தக்கவாறு அமையாவிட்டால் எத்தகைய பயனும் உண்டாகமாட்டாது. (௩௦)

௬௨. துறவியும் செல்வனும்

ஓர் உண்மைத் துறவி ஒருநாள் ஓர் ஊர் வழியாகச் சென்றுகொண்டிருந்தார். அவருடைய பெயர் தெய்வ நாயகம். ஓர் இடத்தில் ஒரு பெரிய வீடு இருந்தது. அவ் வீட்டைப் பார்த்த அளவிலேயே துறவியார் அவ் வீட்டுக்காரன் பெருஞ் செல்வனாக இருக்கவேண்டும் என்று எண்ணினார். செல்வத்திற்குத் தக்கவாறு குண நலம் அமைந்திருக்கிறதா, பார்த்துவிட்டுப் போவோம் என்று முடிவு செய்து அவ் வீட்டிற்குச் சென்றார். வீட்டுக்காரன் வெளியில்தான் உட்கார்ந்திருந்தான். அவனுடைய பெயர் மருதநாயகம். தெய்வநாயகம் மருதநாயகத்தைக் கண்டார். “அப்பா! நெடுந்தொலை வழி நடந்து வருகிறேன். சிறிது உணவளிப்பாயா?” என்று கேட்டார்.

மருதநாயகம் தனக்குள்ள இயற்கைப்படி உரை யாடத் தொடங்கினான். “அடிகாள்! தங்கட்கு வணக்கம் புரிகிறேன். சமையல்காரன் ஊருக்குப் போயிருக்கிறான். சாப்பாட்டிற்கு இங்குச் சரிப்படாது,” என்றான். துறவியார் விடவில்லை. “போனாற் போகட்டும்; சாப்பாட்டுச் செலவுக்குக் காசு கொடுப்பாயானால் உணவுக் கடையில் சாப்பிட்டுவிட்டுப் போகிறேன்,” என்றார். மருதநாயகம், “அடிகாள்! அப்படியே செய்யலாம். காசு கொடுப்பதற்குக் கணக்கப்பிள்ளை ஊரிலில்லை. அவனும் ஊருக்குப் போய்விட்டான்,” என்று கூறினான்.

தெய்வநாயகத் துறவியார் நகைத்து, “அன்பனே! உன்னுடைய குணநலத்தைப் பார்ப்பதற்

காகவே கேட்டேன். நீ எனக்கு ஒன்றுங் கொடுக்க வேண்டாம். நான் பசியா வரம் பெற்றவன். செல்வத்தைப் பெற்ருல் நல்வழியிலே செலவு செய்தல் வேண்டும். செல்வமானது ஆற்றுநீர்ப் பெருக்கால் உண்டாக்கப்படுகிற மேடு பள்ளங்களைப்போல் மாறி மாறி உண்டாகி மறையக்கூடியது. அறம் புரிவாயாளுல் அஃது உனக்கு மறுமைத் துணையாகும். ஆகவே, ஐயமேற்போர்க்குச் சோறு போடு. தண்ணீர் கொடு; நல்லறத்தைச் செய்தால் உள்ளத்தில் மெய்யறிவுத் தன்மை உண்டாகும்'' என்று பலவாறு அறிவுரை கூறிவிட்டுச் சென்ருர்.

"ஆறிடும் மேடும் மடுவும்போல் ஆஞ்செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர்—சோறிடும்
தண்ணீரும் வாருந் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து.''

(உரை.) மாநிலத்தீர்-பெரிய நிலவுலகில் உள்ளவர்களே!, ஆறு இடும் மேடு மடுவும் போல்-ஆற்று வெள்ளத்திஞல் உண்டாக்கப்படுகிற மேட்டையும் பள்ளத்தையும் போல, செல்வம் ஏறிடும் மாறிடும்-செல்வம் வளர்வதுந் தேய்வதுமாக இருக்கும், ஆகையால், சோறு இடும்-இரப்பவர்க்கு உணவு அளியுங்கள், தண்ணீரும் வாரும்-குடிப்பதற்கு நல்ல தண்ணீருங் கொடுங்கள், தருமமே சார்பு ஆக-இத் தருமமே துணையாக, உள்நீர்மை உயர்ந்து வீறும்-உள்ளத்திலே தூய தன்மை சிறந்து விளங்கும்.

(கருத்து.) செல்வம் அழியுந் தன்மையுடையது; செல்வம் பெற்றவர்கள் அறத்தைச் செய்தல் வேண்டும். (கச)

———

௩௩. அடங்காப்பிடாரிகளும் ஆசிரியர்களும்

ஓர் உயர்நிலைப் பள்ளியின் வகுப்பு ஒன்றில் சில அடங்காப்பிடாரி மாணவர்கள் இருந்தனர். அந்த மாணவர்கள் தலைமையாசிரியருக்கோ உதவியாசிரியர் களுக்கோ சிறிதுங் கட்டுப்படுபவரல்லர். ஆசிரியர்கள் சொல்லுவதற்கு நேர்மாறாகவே எதையுஞ் செய்வர். சில ஆசிரியர்கள் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களை அடக்க முயன்றனர்: முடியவில்லை. இவ் வாறாகப் புதிய ஆசிரியர் ஒருவர் அப் பள்ளிக்கு வந் தார். தாம் வேலைக்கு வந்த முதல்நாளே அடங்காப் பிடாரி மாணவர்களை நன்றாக உணர்ந்துகொண்டார். அந்த ஆசிரியர் துடுக்குக்கார மாணவர்களை அடக்குவதற்குச் சிறிதும் முயலவில்லை. அவர்கள் தம் மிடம் எவ்வாறு நடக்க வேண்டும் என்று ஆசிரியர் விரும்பினாரோ அவ்வாறு தாம் அந்த மாணவர்களிடத் தில் நடந்துகொண்டார். பிற ஆசிரியர்களைப்போல் அம் மாணவர்களிடம் கடிந்தும் அதிகாரத் தொனி யோடும் பேசவில்லை. இனிமையாகவும் பணிவாகவும் அன்புடனும் பேசிப் பழகினார். அம் மாணவர்களால் அவரிடம் துள்ள முடியவில்லை. "ஆசிரியரோ நயமாகவும் பணிவாகவும் இருக்கிறார்; நாம் எப்படித் துள்ளு கிறது," என்று எண்ணிப் பணிந்துபோயினர். புதிய ஆசிரியர் வகுப்பு நடத்தும்போது வந்து பார்த்தார் தலைமையாசிரியர். அடங்காப்பிடாரி மாணவர்கள் பெட்டிப் பாம்புபோல் அடங்கிப் பாடங் கேட்டுக் கொண்டிருத்தலைக் கண்டு வியந்தார்.

"வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்."

(உரை.) வேழத்தில் பட்டு உருவும் கோல் பஞ்சில் பாயாது - வலிய யானையின்மேல் பட்டு உருவுகிற அம்பானது மெல்லிய பஞ்சின் மேலே பாயாது, நெடு இருப்புப் பாரைக்கு நெக்குவிடாப் பாறை - நீண்ட இருப்புப் பாரைக்கு பிளவாத கருங்கற் பாறையானது, பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும்- பச்சை மரத்தின் வேருக்குப் பிளந்து போகும். அவ்வாறே, வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் - வன்சொற்கள் இன்சொற்களை வெல்லமாட்டாவாம். (இன்சொற்களே வெல்லும் என்க.)

(கருத்து.) இனிய மொழிகள் தாம் பலனளிக்குமேயன்றிக் கடுஞ் சொற்கள் யாதும் பயனளிக்கமாட்டா. (௩௨)

௬௪. செல்வனும் புலவனும்

ஒரு வீட்டிலே திருமணம் நடைபெற்றது. அழைப்புப் பெற்றிருந்தவர்கள் யாவரும் அத் திருமணத்திற்குச் சென்றனர். வீட்டிற்குரியவன் எல்லாரையும் வரவேற்றுப் போற்றிக் கொண்டிருந் தான்.

நன்கு கல்வி கற்றுத்தேறிய புலவர் ஒருவர் தாமும் அழைப்புப் பெற்றிருந்தபடியால் திருமணத்திற்குச் சென்றார். இவரை யாரும் 'வருக' என்று கூடச் சொல்லவில்லை. பேசாமல் ஒரு மூலையிற் போய் உட்கார்ந்தார். சிறிதுநேரம் சென்றது. செல்வன் ஒருவன் வந்தான். அவனைக் கண்டதும் வீட்டுக்குரியவன் விழுந்தடித்து ஓடினான். "வாருங்கள் வாருங்கள், தங்களுடைய வருகையைத்தான் எல்லாரும் எதிர் பார்த்துக் கொண்டிருந்தோம்" என்று கூறி வரவேற்ற துடன் சந்தனம் பன்னீர் முதலியவற்றைப் பூசி வெற்றிலை பாக்குக் கொடுத்துப் பலவாறு போற் றினான். மற்றும் பலவாறு இது வேண்டுமா அது வேண்டுமா என்று கேட்டுக்கொண்டும், கேட்ட வற்றைக் கொடுத்துக்கொண்டும் இருந்தான்.

இதனைப் பார்த்த புலவர், "கல்வியுடைமை பொருள் உடைமை என்று இரண்டு செல்வமும் செல்வம் எனப்படும்,'' என்று பெரியோர்கள் கூறி யிருக்கிறார்கள். அவ்வாறாகவும், நம்மைத் திரும்பிப் பார்க்க ஒருவரையுங் காணோமே என்று எண்ணமிட்டுக் கொண்டு மேலுஞ் சிறிதுநேரம் இருந்துவிட்டு அவ் விடத்தைவிட்டுப் புறப்பட்டுச் சென்றார். உலகத்தாரும்

உற்றார் உறவினரும் மற்றவர்களும் பொருளுடையவனைத்தான் போற்றுவார்களேயன்றிப் பொருள் அற்றுவறியவனை யாருந் திரும்பிப் பார்க்கமாட்டார்கள்.

"கல்லானே யானாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்."

(உரை.) கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின் - ஒருவன் நூல்களைப் படியாதவனே யானாலும் அவன் கையில் பொருள் மட்டும் இருக்குமாயின், எல்லாரும் சென்று எதிர் கொள்வர் - அவனை யாவரும் போய் எதிர்கொண்டு போற்றுவார்கள், இல்லானை இல்லாளும் வேண்டாள் - (பொருளற்றவன் படித்தவனாக இருந்தாலும்) அவனை அவனுடைய மனைவியும் விரும்பமாட்டாள், ஈன்று எடுத்த தாய் வேண்டாள் - அவனைப் பெற்று வளர்த்த தாயும் விரும்ப மாட்டாள், அவன்வாயில் சொல் செல்லாது - அவன் வாயிற் பிறக்குஞ் சொல்லானது பயன்படமாட்டாது.

(கருத்து.) அறிவற்றவனாக இருந்தாலும் பொருளுடையவனைத்தான் இவ் வுலகத்தினர் போற்றுவர். (௩௪)

———

௩௫. இரண்டு செல்வர்கள்

ஓர் ஊரிலே இரண்டு செல்வர்கள் இருந்தார்கள். ஒருவன் பெயர் வானமாமலை. மற்றவன் பெயர் மலையப்பன்; வானமாமலை நுண்ணறிவுடையவன். எதையுங் குறிப் பறிந்து செய்வான். மலையப்பனோ நுண்ணறிவுடைய வன் அல்லன். யாராவது ஒன்றைக் குறிப்பாகச் சொன்னாலும் உணர்ந்துகொள்ள மாட்டான். வெளிப் படையாகச் சொன்னாலும் அறிந்துகொள்ள மாட்டான்.

ஒருநாள் ஒரு பெரியவர் அவ்வூருக்கு வந்தார். அவர் ஒரு கோயில் திருப்பணியின் பொருட்டுப் பொருள் திரட்டுதற்கு வந்தார். அவர் யாரிடமும் வெளிப்படையாகக் கேட்பதில்லை. குறிப்பாகவே கேட் பார். கொடையாளர்களும் 'குறிப்பறிந்தீதலே கொடை' என்பதற்கு ஏற்ப அப் பெரியவருடைய குறிப்பை யறிந்து பொருள் வழங்கினார்கள்.

வானமாமலை அப் பெரியவர் அவ்வூருக்கு வந் தஉள்ளதன் காரணத்தைக் குறிப்பால் உணர்ந்து பெரும் பொருள் வழங்கினான். அவனுடைய செயல் பெரிய வருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. மலையப்பன் வானமாமலையைவிடப் பெருஞ்செல்வன். அவன் பெரியவருடைய குறிப்பறிந்து நடந்துகொள்ளவில்லை. பிறகு பெரியவர் அவனைக் கண்டு தாம் ஒரு பெரிய திருக்கோயில் திருப்பணியின் பொருட்டுப் பொருள் திரட்டுவதாகவும், வானமாமலை கேளாமலே பெரும் பொருள் வழங்கி யிருப்பதாகவும் மலையப்பனும்

பெரும் பொருள் வழங்க வேண்டுமென்றுந் தெரியப் படுத்தினர்.

இவ்வாறு கேட்டுங்கூட மலையப்பன் யாதுங் கொடுக்கவில்லை. இவன் அறிவிலாப் பேதை. இவனிடம் பொருளைப் பெற்றாலுங்கூட அப்பொருள் பயன் அளிக்காது என்று எண்ணிக்கொண்டே பெரியவர் அவ்வூரைவிட்டுச் சென்றார். அப்பெரியவர் மன வருத்தத்தோடு சென்றபடியினால் நாளடைவில் மலை யப்பனுடைய செல்வவளம் குன்றத் தொடங்கி விட்டது.

"பூவாதே காய்க்கும் மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே—தூவா
விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்கு
உரைத்தாலுந் தோன்றா துணர்வு."

(உரை.) பூவாதே காய்க்கும் மரமும் உள - பூவாமலே காய்க்கின்ற மரங்களும் இருக்கின்றன; அதைப் போல, மக்களுளும் ஏவாதே நின்று தாம் உணர்வார் உளர் - மனிதர்களுள்ளும் ஏவாமலே இருந்து தாமே அறிந்து செயவல்லவரும் உண்டு, தூவா விரைத்தாலும் நன்று ஆகா வித்து என - தூவி விரைத்தாலும் முளைத்துப் பயன்படாத விதைபோல, பேதைக்கு உரைத்தாலும் உணர்வு தோன்றாது - அறிவற்றவனுக்கு எடுத்து விளங்கச் சொன்னாலும் அவனிடத்தில் அறிவு உண்டாகாது.

(கருத்து.) இயற்கையாகவே அறிவற்றிருப்பவனுக்கு அறிவுரைகளைக் கூறினாலும் பலனுண்டாக மாட்டாது. (கூ௪)

———

௰௯. பிறன்மனை விரும்பிய பேதை

பாண்டவர்கள் இவ்வுலகில் வாழ்ந்திருந்த காலத்திலே கீசகன் என்னும் பெயருடையவன் ஒருவன் இருந்தான். அவன் அறிவற்றவன்; முரடன். அவனுக்கு யாராவது அறிவுரை கூறினாலும் தெரியாது. அவன் பாண்டவர்களுடைய மனைவியாகிய திரௌபதியைக் கண்டு அவள்மீது கடுமையான காதல் கொண்டான். பலவாறு முயற்சி செய்தான்.

இச் செய்தி வீமனுக்குத் தெரிந்தது. அவன் ஒரு நாள் இரவு மிகு சூழ்ச்சியாகக் கீசகனை அழைத்து அவனோடு மற்போரிட்டான். அடிமேல் அடி அடித்தான். நன்றாகக் குத்திக் குமைத்தான். வீமன் பெரிய முரடனாகையால் அவனுக்கு ஒப்பாக நின்று போரிடக் கீசகனால் முடியவில்லை. வெகு விரைவாக மாண்டு தொலைந்து முடிந்து போனான். அந்தக் கீசகன் பிறனுடைய மனைவியை விருப்பியபடியால் இவ்வாறு வீணாக மாண்டு தொலைந்தானே என்று பலரும் வருந்தினர்.

"நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்தில்
கொண்ட கருவளிக்குங் கொள்கைபோல்—ஒண்டொடி
போதந் தனங்கல்வி பொன்றவருங் காலம்அயல்
மாதர்மேல் வைப்பார் மனம்."

(உரை.) ஒண்தொடீ - ஒள்ளிய வளையலை அணிந்தவளே!, நண்டு சிப்பி வேய்கதலி - நண்டும் சிப்பியும் மூங்கிலும் வாழையும், நாசம் உறும் காலத்தில் - தாம் அழிவை அடையும்

காலத்திலே, கொண்ட கரு அளிக்கும் கொள்கைபோல் - முறையே, குஞ்சு, முத்து அரிசி, காய்க்குலை ஆகியவற்றை வெளிப்படுத்துகிற தன்மையைப் போல மனிதர்கள், போதம் தனம் கல்வி பென்ற வரும் காலம் - ஞானமும் செல்வமும் வித்தையும் அழிய வருங் காலத்திலே, அயல் மாதர்மேல் மனம் வைப்பார் - பிற மகளிர்மேல் மனம் வைப்பார்கள்.

(கருத்து.) அழிவு நேரக் கூடிய காலத்திலேதான், பிறன் மனையை விரும்பும் தீய எண்ணமும் உண்டாகும். (கூ௭)

---

௯௭. ஔவையார் கூறிய முடிபு

ஒருநாள் ஔவையார் ஓர் ஊர் வழியாகச் சென்று கொண்டிருந்தார். ஓரிடத்தில் பலர்கூடிக் கடுமையாக ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் எதைக் குறித்துச் சொற்போரிடுகிறார்கள் என்று ஔவையார் கருத்துடன் கேட்டார்.

அவர்களில் ஒருவர் சொன்னார்: "திருக்குறள் தான் நூல்களிலே சிறந்தது. திருக்குறளுக்கு ஒப்பாக வேறொருநூலும் இல்லை," என்று. இதனைக் கேட்டு வேறொருவர், "அப்படிச் சொல்லாதீர்கள். இப்பொழு துள்ள நூல்களிலே சிறந்தது உபநிடதங்கள் தாம்," என்றார். இன்னொருவர், "அப்படியன்று; மறை நூலின் கருத்துகளைக்கொண்டு விளங்குகின்ற மூவர் தேவாரமுந்தான் மிக உயர்ந்தவை," என்றார்.

மற்றொருவர், "உங்களுடைய கருத்துகள் சிறந் தனவாக எனக்குத் தெரியவில்லை, திருவாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகமும் திருக்கோவை யாரும் இருக்கும்பொழுது அவற்றை மறந்துவிட்டு இப்படிப் பேசலாமா?" என்றார். இன்னொருவரோ, "நீங்கள் எவ்வாறு வேண்டுமானாலுஞ் சொல்லிக் கொள்ளுங்கள். நீங்கள் சொல்வதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். திருமூலநாயனார் அருளிச்செய்த திருமந்திரத்தைத்தான் நான் பெரிதும் பாராட்டிப் போற்றுகிறேன்," என்றார்.

இவ்வுரையாடலைக் கேட்ட ஔவையார் அவர் களைப் பார்த்து, "நீங்கள் வீணாகச் சொற்போரிட

வேண்டாம். நீங்கள் குறிப்பிட்ட திருக்குறள், உபநிடதங்கள், மூவர் தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திருமந்திரம் ஆகியவையெல்லாம் ஒரே தன்மையான பெருமையுடையவை தாம்," என்று முடிவாகக் கூறினர். சொற்போரிட்டவர்கள் ஔவையாருடைய அறிவுத் திறமையைக் கண்டு பெரிதும் வியப்படைந்து போற்றினர்கள்.

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவருந் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்."

(உரை) தேவர் குறளும் - திருவள்ளுவ நாயனருடைய திருக்குறளும், திருநான்மறைமுடிவும் சிறப்புப் - பொருந்திய நான்மறைகளின் முடிவாகிய உபநிடதங்களும், மூவர் தமிழும் - மூவர் தேவாரமும், முனிமொழியும் கோவை திருவாசகமும் - மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் திருக்கோவையார் ஆகியவையும், திருமூலர் சொல்லும் - திருமந்திரமும், ஒரு வாசகம் என்று உணர் - ஒரு பொருளையே குறிப்பன என்று உணர்ந்து கொள்வாயாக.

(கருத்து.) திருக்குறள், திருநான்மறை, தேவாரம், திருக்கோவையார், திருமந்திரம் ஆகியவை ஒரே தன்மையான சிறப்புடையவை. (௩௯)

தலைமை நிலையம் :

79, பிரகாசம் சாலை, சென்னை-1.

கிளை நிலையங்கள் :

திருநெல்வேலி-6.

மதுரை-1. கோயமுத்தூர்-1

கும்பகோணம்-1. திருச்சிராப்பள்ளி-2.

மேனுறை திருவரங்கனுர் அச்சகத்தில்
அச்சிடப்பெற்றது.